# இலக்கியத் தூதர்கள்


எழுதியவர்

பேராசிரியர் வித்துவான்

[illegible] கண்ணப்ப முதலியார், எம்.ஏ., பி.ஓ.எல்.

தமிழ்த் துறைத் தலைவர், புதுக் கல்லூரி, சென்னை-14



வெளியிட்டோர்

ஸ்ரீ. பலராமன் & பிரதர்ஸ்

[illegible] ஹால்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-8.



(உரிமை ஆசிரியர்க்கே)



1966

(விலை ரூ. 1

# ELAKKIYA THOOTHARGAL

**Supplementary Reader for VIII Standard**

*By*

PROFESSOR VIDWAN
PALOOR KANNAPPA MUDALIAR, M.A., B.O.L.
Head of Tamil Department, New College, Madras.

T. BALARAMAN & BROTHERS
(PUBLISHERS OF QUALITY BOOKS)
5/5, WHANNELS ROAD, EGMORE, MADRAS-8.

*Copyright* ] 1967 [*Price Re. 1-(*

முதற் பதிப்பு 1966

© உரிமை ஆசிரியர்க்கே.

Paper used: 10.9 Kgs. D/Cr. White Printing

Printed at Darwin Printing Works, Egmore, Madras-8

# முன்னுரை

செந்தமிழ் நூல்களில் படிக்கப் படிக்கச் சுவை தரும் பகுதிகள் பலவாக இருக்கின்றன. அவற்றுள் ஒரு பகுதி அந்நூல்களில் வரும் தூதுரைக்கும் பகுதியாகும். அப்பகுதிகளை மட்டும், அச் செந்தமிழ் இலக்கியங்கள் சிலவற்றினின்றும் எடுத்து எழுதி, இலக்கியத் தூதர் என்னும் பெயருடன் இந்நூலை வெளியிடுகின்றனன்.

இந்நூல் மாணவர்கட்குப் பெரும் பயன் விளைத்து இலக்கியச் சுவையினை இனிது நுகரத் துணை செய்யும் என்பது எனது துணிபு.

'அம்மை அப்பர் அகம்'
43, வி. வி. கோவில் தெரு,
சூளை, சென்னை—7.
15-11-66.

ஆசிரியர்.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
| --- | --- | --- |
| | தூதர் பண்பு .. .. .. | 1 |
| 1. | ஔவையார் .. .. .. | 5 |
| 2. | தியாகர் .. .. .. | 12 |
| 3. | அங்கதன் .. .. .. | 23 |
| 4. | வீரவாகு .. .. .. | 32 |
| 5. | உலூகன் .. .. .. | 41 |
| 6. | சஞ்சயன் .. .. .. | 49 |
| 7. | கண்ணன் .. .. .. | 55 |
| 8. | நளன் .. .. .. | 72 |
| 9. | அன்னம் .. .. .. | 81 |
| | பயிற்சி வினாக்கள் .. .. | 90 |

# இலக்கியத் தூதர்கள்

## தூதர் பண்பு

வள்ளுவர் வகுத்துக் கூறும் பகுதிகளில் தூதும் ஒன்று. இப்பகுதியில் தூதுரைப்பவர்களின் இயல்புகள் அனைத்தும் இனிதின் இயம்பப்பட்டுள்ளன. தூதர் பண்பு இன்னது என்பதை முன்கூட்டி அறிந்தால்தான், இப்பண்பமைந்த தூதர்கள் தூதுச் செய்திகளை உரியவர்களிடம் இயம்பிய முறைகளை நன்கு விளங்கிக்கொள்ளலாம். இந்தக் காரணம் கொண்டே, தூதர் பண்புகள் முன்னர் விளக்கப் படுகின்றன.

தூதராகச் சென்று உரைப்பவர்களிலும் இரு வகையினர் உளர். ஒரு வகையினர் தம்மைத் தூதராகச் சென்று வருமாறு அனுப்பியவர் கூறியவற்றைக் கூறி வருபவர்கள். மற்றொரு வகையினர் தாமாகவே சமயத்துக் கேற்ப வகுத்துக் கூறுபவர். ஆகவே இருவகையினர் ஆவர். இனி, இவர்கள் பண்பைச் சற்றுப் பார்ப்போமாக. தூதுரைப்பவர் தம் சுற்றத்தவரிடத்து, அதாவது தம்மைச் சார்ந்தவரிடத்து, அன்புடையராயும், நற்குடிப் பிறப்பினராயும் இருத்தல் வேண்டும். தமக்கு முன் தம் மரபில் தூது சென்றவர் எவரேனும் இருப்பின், அவர்களின் இயல்புகளையும் கேட்டு அறிந்துகொள்

றுதல் வேண்டும். தூதராகச் சென்று உரைப்பன வற்றை உரைக்கும் போது, தம் சுற்றத்தவர்க்கு யாதொரு தீதும் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். இவர்களது பேச்சுவன்மையால் எதிரி களும் தம் வயத்தராதல் வேண்டும்.

தூதர்கள், "அன்புடையவர்களாகவும், பல நூல் களை ஆய்ந்த அறிவுடையவர்களாகவும், நல்ல குடி யில் வந்தவர்களாகவும், பேச்சில் நயம் வாய்ந்தவர்க ளாகவும், நல்ல உறவினரைப் பெற்றிருப்பவர்களாக வும், உடல் கட்டும் அழகும் சொல்வன்மையுடைய வர்களாகவும் இருத்தல்வேண்டும்" என்று பாரத வெண்பா கூறுவதையும் நினைவில் கொள்ளுதல் வேண்டும். அன்பும், அறிவும், ஆராய்ந்த சொல் வன்மையும் ஆகிய இம்முப்பண்புகளும் மிக மிக இன்றியமையாதவை. ஆராய்ந்த சொல்வன்மை என் றதனால், தூதுவர் நல்ல கல்விப் பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. தூது வர் எல்லா நூல்களையும் கற்று வல்லார் முன், அந் நூல்களைத் தாமும் கற்று வல்லவராய்த் திகழ்தல் இன்றியமையாதது. நூலை நன்கு ஓதியவர்களைக் காட்டிலும், அந் நூல்களை ஓதி உணர்ந்தவர் முன், நூலின் திறனை வகுத்துக் கூறும் ஆற்றல் தூதுவர்க் குப் பெரிதும் வேண்டற்பாலது. அன்பு வேண்டும்; அறிவு வேண்டும்; ஆராய்ந்த படிப்பும் வேண்டும். இந்த மூன்றையும் பெற்றவரே தூதராகச் செல்லத் தக்கவர் ஆவர்.

செய்திகளைப் பிறர் இடத்துக் கூறுங்காலத்துத் தொகுத்துச் சொல்ல வேண்டியவற்றைத் தொகுத்

துச் சொல்லவேண்டும். இன்னாதது இருக்குமாயின், அதனைச் சொல்லும் காலத்து, இனிய சொற்களால் எதிரி மனம் மகிழும்படியும் சொல்ல வேண்டும். இதனால் சுருங்கச் சொல்ல வேண்டும் என்பதும், விளங்க உரைக்கவேண்டும் என்பதும், விரும்பாத சொற்களை நீக்கவேண்டும் என்பதும், மகிழுமாறு பேசவேண்டும் என்பதும் விளங்குகின்றன அல்லவா ?

தூதராகச் சென்றவர், தம்மை அனுப்பியவர் கூறியவற்றை எதிரியிடத்தில் கூறும்போது; அவ்வெதிரி கோபங்கொண்டு, தம்மைக் கொல்வான் போன்று சீற்றக் குறியுடன் பார்க்கவும் நேரிடும். அந்தக் காலத்திலும் சிறிதும் அஞ்சுதல் கூடாது. காலத்தை அறிந்து காரியம் முடிதற்கான முறையில் பேசி நடந்து கொள்ளல்வேண்டும். இவற்ரேடு தம் கடமையையும், காலத்தையும், இடத்தையும் அறிதல் தூதுவர்க்குத் தலைசிறந்த பண்பு ஆகும். தம்மவர் நிலையினையும், எதிரிகளின் நிலைமையினையும், அறிந்து அவற்றிற்கு ஏற்பச் செயல் முறைகளைச் செய்தல் வேண்டும்.

தூதுவர்க்கு உள்ளத்தூய்மை வேண்டற்பாலது. பொருளை விரும்பலும் இன்பம் விழைதலும் கூடா. துணிவுடைமை வேண்டியது. துணிவுடைமையாவது திட புத்தியாம். தம்மை அனுப்பி, "இன்னவை கூறி வா" என்று கூறி விடுத்தபோது, தமக்கு ஏதேனும் தீங்கு வருமே என்று கருதி, அஞ்சித் தம் தலைவர்க்குத் தாழ்வு வரும் வார்த்தைகளை வாய் சோர்ந்தும் சொல்லாத பண்பாடு, தூதுவர்க்கு

முக்கியமானதாகும். மறந்தும் வடுச் சொற்களை வழங்குதல் கூடாது.

"தூதுவர் தடுமாற்றம் சிறிதும் இல்லாமல், தகுதி வாய்ந்த சொற்களால் (அதாவது பொருத்தமான சொற்களால்) பேசி வருதல் வேண்டும். குற்றம் நிறைந்த சொற்களை வாய் தவறியும் சொல்லுதல் கூடாது. தம்மிடம் கூறி அனுப்பிய செய்திகளிலே எதையும் குறைக்காமல் கூறுதல் வேண்டும். எதிரி கோபித்தாலும் அஞ்சாது இருத்தல் வேண்டும்" என்று பாரத வெண்பா அறிவித்தலையும் இங்கு நினைவு கொள்வோமாக.

தம் உயிருக்குத் தீங்கு வருவதாயினும், அதன் பொருட்டுத் தம் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளத் தம்மை அனுப்பிய தலைவர் மொழிகளைப் பகைவரிடத்தோ, அன்றி எதிரிகளிடத்தோ கூறுது, கூற வேண்டுவனவற்றை மறைத்துக் கூறுவது தூதர்க்குக் கூடாது. இன்னோரன்ன இயல்புகளைப் படைத்தவரே தூதுவராகச் செல்லுதற்கு உரியவர். இவ்வியல்புகளைப் பெற்ற பலருள் சிலர் தூதராகச்சென்று கூறிய முறைகளையே இனிவரும் வரலாற்றுக் குறிப்புகள் நமக்கு நன்கு அறிவிப்பனவாகும். அவற்றை இனிக் காண்போமாக.

# 1. ஔவையார்

சங்க காலத்தில் கடை எழு வள்ளல்கள் என்று குறிப்பிடத் தக்கவர்கள் பாரி, ஓரி, ஆய் அண்டிரன், திருமுடிக்காரி, நள்ளி, நெடுமான் அஞ்சி, பேகன் என்பவர்கள். இவர்களுள் ஒருவனுன நெடுமான் அஞ்சி என்பவன், அதிகமான் நெடுமான் அஞ்சி என்றும், அதிகமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினி என்றும் அழைக்கப்படுபவன். இவன் போரை விரும்பும் தோளினன். போருக்குச் சென்ருல், பெரிதும் வெற்றியுடன் திரும்பும் வீர தீரன். சேரன், சோழன், திதியன், எருமையூரன், இருங்கோ வேண்மான், பாண்டியன், பொருநன் என்னும் எழு வரையும் வென்ற வெற்றி வீரன். இவன் மழவர் குடிக்குத் தலைவனுக விளங்கியவன். தகடூருக்குத் தலைவன். குதிரை மலையும் இவனுக்கு உரியதே. இவனுக்கு வெட்சி மாலை அடையாள மாலையாகும். வேங்கை மலரும் கூவிளங் கண்ணியும் (மாலையும்) சூடும் சூரனுவான். இவன் சேர மன்னர் மரபின் தொடர்புடையவன் என்று கருதப் படுவதால், அம்மரபினர் மாலையாகிய பனம்பூ மாலையையும் பாங்குற அணியும் பார்த்திபன் ஆவான்.

நாம் இதுபோது கரும்பின் சுவையினை நன்கு சுவைக்கிறேம். இக் கரும்பு தமிழ்நாட்டில் தோன்று தற்கு ஆதிகாரணர் இந் நெடுமான் அஞ்சியின் மூன்னேரே ஆவர். அம் முன்னேர்கள் தேவர்களைப்

போற்றிக் கரும்பினை அவ்விண்ணுட்டினின்றும் இம் மண்ணுட்டிற்குக் கொணர்ந்தனர்.

இன்னேரன்ன சீருக்கும் சிறப்புக்கும் பேருக்கும் புகழுக்கும் காரணனுன அதிகமான் நெடுமான் அஞ்சிக்கும் ஔவை மூதாட்டியாருக்கும் நெருங்கிய நட்புரிமையும் அன்புடைமையும் உண்டு. நெடுமான் அஞ்சி பொதுப்படப் புலவர்களிடத்தில் பேரன்புடையவனுயினும், சிறப்பாக ஔவைப் பெருமாட்டியாரிடம் அளவுகடந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தவன். இஃது அவன் இவ்வம்மையாருக்கு ஈந்த ஓர் அரிய பொருளினுல் நன்கு அறியக் கிடக்கிறது. அதாவது,நெடுமான் அஞ்சி,கிடைத்தற்கரிய ஒரு நெல்லிக்கனியினைப் பெற்றனன். அக்கனி இருமலைகளுக்கிடையே ஒரு பள்ளத்தாக்கில் கிட்டுதற்கரிய முள்ளும் புதரும் அடர்ந்து செறிந்து இருந்த இடத்தில் வளர்ந்திருந்த நெல்லி மரத்தின் உச்சங்கிளையில் பழுத்து இருந்தது. இவ்வாறு இருந்த நெல்லிக்கனியினைப் பெற்றனன் அதிகமான் அஞ்சி. அக்கனிக்குத் தனித்ததொரு சிறப்பும் அமைந்திருந்தது. அக்கனியினை யார் உண்ணுகின்றனரோ, அவர்கள் ஆயுள் நீடிக்கப்பட்டு, நில உலகில் நீடு வாழ்வார்கள். இந்தப் பண்பு அந்தக் கனிக்கு உண்டு என்பதை அதிகமான் நெடுமான் அஞ்சி அறிவான்.

இத்தகைய கனி ஒன்று கிடைத்தால் நாம் என் செய்வோம்? நாமே உண்டு நெடுநாள் நில உலகில் வாழ விருப்பம் கொள்வோம். இவ்வரிய கனியினைப் பிறர்க்கு ஈய முற்படுவோமா? அப்போது, 'தனக்கு

மிஞ்சிதானே தருமம்' என்ற பழமொழியும் நம் நினைவிற்கு வந்து நம் எண்ணத்தினை மேலும் உறுதி செய்து கொள்வோம். ஆனால், அதிகமான் நெடு மான் அஞ்சி, அக் கனியினைத் தானே உண்ண எண்ணம் கொண்டிலன். அப்படி எண்ணம் கொண் டிருந்தால், அவன் எப்படி வள்ளல்களின் வரிசை யில் வைத்துச் சிறப்பிக்கப்படுவான்? ஈந்தால் தானே இசைபட (புகழ் உண்டாக) வாழ இயலும்? ஆகவே, அதிகமான் நெடுமான் அஞ்சி, அக்கனி யினை ஔவையார்க்கு ஈந்து அகம் மகிழ்ந்தான். அக்கனியினை அவ்வம்மையார் உண்டபின், அதன் இயல்பினை அறிவித்தனன். முன்னர் அறிவித்திருந் தால், அவ்வம்மையார் அதனை உண்ண மறுத்து, அவனையே உண்ணுமாறு வற்புறுத்தவும் கூடும். இக் காரணம் கொண்டே அவன் முன்னர் அதன் தன்மையினை அறிவிக்காமல், பின்னர் அறி வித்தனன். ஔவையார் அதிகனுடைய தனக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெற்றியினைக் கண்டு பெருமகிழ்வு கொண்டனர். அப்போது அவனைப் புகழ்ந்து வாழ்த்தினர் அவ்வாழ்த்து, 'அழகிய மாலையினை அணிந்துள்ள அதிகமான் நெடுமான் அஞ்சியே! நீ எனக்கு மலைப் பிளவுகட்கு இடையே வளர்ந்த நெல்லி மரத்தின் கனியினை அதன் அருமை பெருமையினை நீ நன்கு உணர்ந்தும் அதனை எனக்கு உரைக்காமல், நான் பல்லாண்டு வாழ எனக்குக் கொடுத்தனையே! ஆகவே, வெள்ளிய பிறைச் சந்தி ரனைச் சடையில் அணிந்த நீலமணி போன்ற கழுத்தினை யுடைய ஒப்பற்ற சிவபெருமான் போல் வாழ்க' என்று வாழ்த்தினர். இந் நிகழ்ச்சி

ஒன்றே ஔவையாருக்கும் அதிகமானுக்கும் இருந்த அன்பின் எல்லையை இனிதின் விளக்கும். இது நிற்க.

தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தினைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமான் இளந்திரையன் என்பவன் அரசு புரிந்து வந்தனன். இவனைத் திரையன், திரையல் என்றும் புலவர்கள் குறிப்பிடுவர். இவன் கவி பாடும் காவலனும் (அரசனும்) ஆவன். இவன்பாடிய பாடல்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. இவனால் ஓர் ஊரும் உண்டாக்கப்பட்டுள்ளது. அது திரையனூர் எனப்படும். இத்தகையவன் தன் படைவன்மை காரணமாகவும், தன்னாட்டை மேலும் பெருக்கவேண்டும் என்பதற்காகவும், தன் படைவன்மையினை மேலும் மேலும் பெருக்கிப் போருக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். அவனுக்கு அதிகமான் நெடுமான் அஞ்சியைப் பொருது வெற்றி கொள்ளவேண்டும் என்பது நெடு நாளைய எண்ணமாகும்.

அதிகமான் நெடுமான் அஞ்சி போர் என்ன வீங்கும் பொலங் கொள் (அழகு கொண்ட) தோளினன் என்றாலும், அவனுக்கு வர வரப் போரில் வீணே மக்கள் மடிவது குறித்து இரக்கம் தோன்றலாயிற்று. எவ்வளவுக் கெவ்வளவு போர் புரியாமல் சமாதானமாகச் செல்ல முடியுமோ, அந்த மார்க்கத்தையே கடைப்பிடித்து ஒழுக எண்ணங் கொண்டனன். ஆகவே, தொண்டைமான் இளந்திரையனது உள்ளக் கிடக்கையினை உணர்ந்த அதிக

மான், அவ்விளந்திரையன் வீணே போரிடாது, அவனும் அவன் வீரரும் மடியாது இருக்கும் பொருட்டுத் தூதுவரை அனுப்பி அமைதியினை நிலை நாட்டக் கருதினன். தூதுவராக யாரை அனுப்புவது என்ற எண்ணமும் அவனுக்கு உடன் தோன்றியது. இவ்வெண்ணத்தின் முடிவு ஒளவை மூதாட்டியாரையே தூதுவராக அனுப்புவது என்பதாக அமைந்தது. வேறு எவரை அனுப்பினும் போருக்கு எழுவே முடிவு ஏற்படும். ஆனல் ஒளவையாரை அனுப்பினுல், அப்படி ஒன்றும் ஏற்படாமல் எல்லாம் இனிது முடியும் என்ற நோக்கங் கொண்டே ஒளவையாரையே தூதுவராக அனுப்பத் தீர்மானித்தான். அத்தீர்மானத்திற்கு ஒளவையாரும் இசைந்து, தொண்டைமான் இளந்திரையனிடம் தூதராகப் போயினர். தொண்டைமான் இளந்திரையன் ஒளவை மூதாட்டியாரைக் கண்டதும், இன்முகம் காட்டி இன்னுரை கூறி நல்வரவேற்றுச் சிறந்த ஆசனத்தில் அமரச் செய்து வணங்கித் தன் இருக்கையில் அமர்ந்தனன்.

ஒளவையரரும் தொண்டைமானும் சிறிது நேரம் பல விடயங்களைப்பற்றி உரையாடினர். ஒளவையாரும் தாம் இன்னதன் பொருட்டு வந்ததாக ஒன்றும் தொண்டைமானுக்கு உணர்த்திலர். அவனும் அவ்வம்மையாரை, 'எங்கு? எதன் பொருட்டு வந்தீர்?' என்று வினவவும் இல்லை. ஒளவையார் புலவர் சிகாமணியார் ஆதலால், அவர் பல்வேறு இடங்கட்குச் செல்லும் பான்மையர். அம் முறைப்படி தன்னிடம் வந்தவர் என்ற எண்ணத்

தில் இளந்திரையன் வந்த காரணத்தை வினவாது இருந்தனன். என்றாலும், தன் படைவன்மை இவ் வளவு என்பதை ஔவை மூதாட்டியார் அறியின் ஒரு வேளை அதிகனை அம்மையார் கண்டு உரைக் கவும் கூடும் என்று உளம் கொண்டு தன் படைக்கலக் கொட்டிலைக் (படைக்கலங்கள் வைக் கப்பட்ட இடம்) காட்ட அழைத்துச் சென்றனன்.

ஔவை மூதாட்டியார், படைக்கலங்கள் பல வும் புதியனவாகச் செய்யப்பட்டுக் கைப்பிடிகள் நல்ல உறுதியுடையனவாக அமைக்கப்பட்டு, முனை கள் யாவும் கூர்மையுடையனவாய் இருக்கப்பெற்று, நெய்யும் பூசப்பட்டு, மாலைகளும் சூட்டப்பட்டு இருக்கின்ற நிலையினை நன்கு கண்டனர். ஔவைப் பிராட்டியார் இதுதான் தாம் வந்த கருத்தை அறிவிப்பதற்கும், தொண்டைமான் இளந்திரையன் படைவன்மையின் செருக்கை அடக்குதற்கும் ஏற்ற சந்தர்ப்பம் என்று உளம் கொண்டு, "தொண்டை மான் இளந்திரைய! நின் படைக்கலம் கண்டு பெரு மகிழ்வு கொள்கின்றேன். உன் படைக் கலங்கள் போர்முனை காணாதனவாய், கூர் மழுங்காமல், கைப் பிடிகள் தளராமல், மாலையணிந்து நெய்தடவப் பட்டு அலங்காரமாகப் படைக்கலச் சாலையில் கட்டு டன் இருக்கின்றன. ஆனால், அதிகமான் நெடுமான் அஞ்சியின் படைக்கலங்களோ எனில், போரில் மிகுதியும் பயன் பட்டுப் பகைவர் உடலில் புகுந்து, இரத்தக் கறை தோய்ந்து, முனைகளில் தசைகள் பற்றப்பட்டுக் கைப்பிடிகள் தளர்ந்து கூர் மழுங்கி மீண்டும் போருக்குப் பயன்படும் நிலையினைப் பெறக்

கொல்லனது உலைக் களத்தில் செம்மை பெறக்கிடக் கின்றன" என்று விளக்கமாக எடுத்து மொழிந்தனர்.

இவ்வாறு கூறியதன் உட்பொருள் 'உன் போர்க் கருவிகள் போர்முனை காணுமல் உன் அரண்மனை யில் கிடக்கின்றன. அதிகனது படைக்கலங்கள் போர்முனை கண்டு நன்கு பழகி வெற்றி மாலை சூடிச் சிதைந்து கிடக்கின்றன. இத்தகைய படையினை யுடைய அதிகமானுடன் நீ பகை கொண்டு போர் தொடுத்துப் பயனில்லை. வெற்றி அவனுக்கே அன்றி உனக்குக் கிட்டாது' என்பதாம்.

இளந்திரையன் நுண்ணறிவினன் ஆதலின், ஔவையாரின் அமுதவாக்கின் உள் பொருளை உணர்ந்து, அதிகனேடு அமர் புரிய இருந்த எண் ணத்தை விட்டொழித்தான். ஔவையாரும் இளந் திரையனிடம் விடை பெற்று அதிகனை அடைந் தனர். தாம் தூதுவராகச் சென்றது முதல் மீண்டது வரையில் நிகழ்ந்த யாவற்றையும், ஒன்றையும் விடாமல் கூறினர். அதிகனும் மகிழ்ந்தனன். போரும் நின்றது. அறிஞர் முனைந்தால் ஆகாததும் உண்டோ?

# 2. தியாகர்

இறைவன் எங்கும் நிறைந்தவனுயினும், குறிப்பிட்ட சில இடங்கள் அவன் சிறப்புற வீற்றிருக்கும் தானங்கள் என்று நம் முன்னோர் கூறியுள்ளனர். அத்தகைய இடங்களில் திருக்கைலாய மலையும் ஒன்று. அங்கு உயிர்கட்கு அருள்புரியும் நோக்கோடு எழுந்தருளிய சிவ பெருமானுக்குத் தொண்டு புரிந்து வந்தவர்களில் ஆலால சுந்தரர் என்பவரும் ஒருவர். அவரைப் போலவே உமாதேவியாருக்குப் பணி விடை புரிந்தவர்கள் இருவர். அவர்களுள் ஒருத்தியின் பெயர் அனிந்திதை. மற்றொருத்தியின் பெயர் கமலினி என்பது.

ஒரு சமயம் திருக்கைலை மலையின் சோலையில் மலர் கொய்து கொண்டிருந்த ஆலால சுந்தரர், அம்மையாருக்கு மலர் பறிக்க வந்துற்ற மாதர்கள் இருவரையும் கண்ணுற்றனர். கண்ணுற்ற ஆலால சுந்தரர் அம்மாதர்களை மணந்து வாழ எண்ணினர். இவர் எண்ணியவாறே மங்கையர் திலகங்களும் எண்ணங் கொண்டனர். உள்ளத்தால் தம் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டவர்கள், வாயால் ஒன்றும் உரையாமல் தம் தம் இருப்பிடம் சார்ந்தனர்.

எங்கும் கண்ணுளானுய் எங்கும் காதுளானுய் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனும் சிவபெரு

மான் தனது தொண்டன் உள்ளக்கருத்தையும், தன் தேவியின் சேடியர்களின் எண்ணக் குறிப்பினை யும் அறிந்து ஆலால சுந்தரரை விளித்து "அன்ப! நீ கொண்ட எண்ணங் குறித்து எமக்கு மகிழ்வே என்றாலும், உன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள இஃது இடம் அன்று. ஆகவே, சுந்தர, நீ நிலவுலகில் பிறந்து உள்ளம் விரும்பியவாறு கடிமணம் புரிந்து, பின்பு ஈண்டு அடைவாயாக" என்று ஆணை பிறப்பித்தனன். ஆலால சுந்தரர் அவ்வாணையினைத் தலைமேற் கொண்டு நில உலகில் தோன்றும் வாய்ப்பினைப் பெற்றனர்.

ஆலால சுந்தரர் திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதிசைவர் மரபிலே சடைய னார், இசைஞானியார் ஆகிய இருவர் செய்த தவப் பேற்றினால் திரு மகனாராகப் பிறந்தருளினார். அப் போது இவருக்கு இடப்பட்ட பெயர் நம்பி ஆரூரர் என்பது. இவரைப் போலவே, கமலினியார் என்பவர் திருவாரூரில் தோன்றினார். அப்போது அவ் வம்மையார் திருப் பெயர் பரவையார் என்பது. இவ் வம்மையாரைப் போலவே அனிந்திதையாரும் ஞாயிறு என்னும் ஊரில் ஞாயிறு கிழார் என்பவருக் குத் திருமகளாராகத் தோன்றினார். அதுபோது இவ்வம்மையாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் சங்கிலியார் என்பது.

நம்பி ஆரூரர் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமாக வளர்ந்து, இறையன்பு மிகுதியும் பெற்று, அழகிய தோற்ற முடையவராய் விளங்கி, இறைவன் எழுந்தருளியுள்ள தலங்களைக் கண்டு,

இன்புறும் பணியில் ஈடுபட்டிருந்தனர். இம்முறையில் சிற்சில திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்தவர், திருவாரூரை அடைந்தனர். திருவாரூர்த் தியாகேசரைக் கண்டு இன்புற்றனர். இங்ஙனம் இன்புற்ற நம்பி ஆரூரர் முன்னைய ஊழ்காரணமாகத் தியாகேசப் பெருமானைத் தினமும் வழிபடும் முறையில் ஆலயத்திற்கு வந்த பரவையாரைக் கண்ணுற்று, அவரை மணக்க விரும்பினர். அவ்விருப்பம் தியாகேசர் திருவருளால் இனிது முடிந்தது. நம்பி ஆரூரர் நங்கை பரவையாருடன் இல்லறத்தை ஏற்று இன்புடன் வாழ்ந்து வரலானர். இங்ஙனம் நாட்கள் பல கழிந்தன. முன்பே நம்பியாரூரர் இறைவன் எழுந்தருளிய திருத்தலங்களைத் தாம் நேரில் கண்டு இன்புறும் தொண்டை மேற்கொண்டவர் என்பதைக் குறிப்பிட்டோம். அந்த முறைமைக்கு முரணுகாது, தம்பிரான் தோழராம் சுந்தரர் தமது தலயாத்திரையை மேற்கொண்டு சோழ நாட்டிலுள்ள திருத்தலங்கள் பல்வற்றையும் கண்டு கைகூப்பித் தொழுது, தொண்டை நாட்டை அடைந்தனர்.

தொண்டை நாட்டில் சிறப்புடன் விளங்கும் திருத்தலங்களுள் திரு ஒற்றியூரும் ஒன்று. அத்தலத்தில் உள்ள பெருமான் திருப் பெயர் எழுத்தறியும் பெருமான் என்பது. இது கடற்கரை ஓரத்தில் உள்ள திருப்பதி. அதனுல்தான், "தண்கடல் ஓதம் (அலை) வந்துலவும் ஒற்றியூர்" என்று ஓதப்பெறும் சிறப்பினைப் பெற்றுளது. இத்தலத்தில்தான் திருக்கைலையினின்று வந்த அனிந்திதை

அம்மையாம் சங்கிலி நாச்சியார் மிகவும் உள்ளன்பு கொண்டு இறைவனை வழிபட்டு வந்தனர். இவ்வம்மையார் மலர்களைக் கொய்து மாலையாகக் கட்டி மாதொரு பாகனுருக்குச் சூட்டி மகிழ்ந்து வந்தனர். இத்தொண்டு முட்டின்றி நடந்து வந்தது.

இவ்வாறு இத்தொண்டினைச் சங்கிலி நாச்சியார் நடத்திக் கொண்டு வருகையில், சுந்தரராம் நம்பி ஆரூரர் எழுத்தறியும் பெருமானை ஏத்தித் தொழத் திருக்கோயிலை அடைந்தனர். எம்பெருமானைப் போற்றினர். இவ்வாறு போற்றியவர் கண்ணுக்குக் கண்ணுதல் பெருமான் கருணை காரணமாகச் சங்கிலியார் காட்சி அளித்தனர். அக்காரிகையாரைக் கண்டதும் சுந்தரர் உள்ளம் அவ்வம்மையார் அழகில் ஈடுபட்டது. ஆகவே, நம்பி ஆரூரர் அவ்வம்மையாரையும் மணந்து வாழ விரும்பினர். இவ்வாறு இவர் விரும்பியது தவறு இல்லை. நம்பியாரூரர் கமலினியாரையும், அனிந்திதையாரையும் மணக்கத் தானே வெள்ளியங்கிரியினின்று இம் மண்ணுலகு வந்து தோன்றி அருளினர்? இந்த முறையில் திருவாரூரில் சுந்தரர் கமலினியாராகிய பரவை நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்டனர். அதற்கடுத்த முறைப்படி அனிந்திதையாகிய சங்கிலி நாச்சியாரைத் திரு ஒற்றியூரில் காண நேர்ந்து, அவ்வம்மையாரையும் தமக்குத் திருமணம் செய்து வைக்க ஒற்றியீசனை வேண்டி நின்றார். இறைவரும் முன்னைய விதியின் காரணத்தினை முன்னிட்டு ஒற்றியூர் அன்பர்களைக் கொண்டு திருமணத்தை முடித்து

வைத்தனர். நம்பி ஆரூரர், சிவபெருமான் இத்துணை எளிவந்து தம் கருத்தினை நிறைவேற்றி வைத்தமைக்குப் பெரிதும் மகிழ்ந்து அவனது திருவடிகளில் இடையருத இன்ப, அன்பு கொண்டு போற்றி வந்தனர்.

நம்பி ஆரூரர் நங்கை சங்கிலியாருடன் சின்னுள் தங்கி, இன்பமாக இனிது வாழ்ந்தனர். தம்பிரான் தோழர், யாத்திரை செய்வதில் பெரு விருப்புடையவர் ஆதலானும், தமக்குப் பரவை நாச்சியாரை மணம் முடித்து வைத்த திருவாரூர்த் தியாகேசப் பெருமானை விட்டுப் பிரிந்து பலநாள் ஆனமையின், அவரைக் கண்டு தரிசிக்க வேண்டுமென்ற காரணத்தாலும் திரு ஒற்றியூரை விட்டுப் பிரிந்து இடையில் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டு, இறுதியில் திருவாரூரை அடைந்தனர்.

திருவாரூர்ப் பரவை நாச்சியார் தமது அன்புக்குரிய ஆரூரர் தம்மைப் பிரிந்து போன நாள் தொட்டுப் பிரிவு ஆற்றுமையால் மிகவும் துன்புற்றிருந்தார். இவ்வாறு காதலர் பிரிவால் கலக்கமுற்ற இவ்வம்மையார்க்குக் கலக்கத்தின் மேல் ஒரு கலக்கமாக ஒரு செய்தி இவருடைய காதில் வந்து வீழ்ந்தது. அதாவது தலயாத்திரை காரணமாக வெளியூர்களுக்குச் சென்ற தம் காதலர், தொண்டை நாட்டை அடைந்து, திரு ஒற்றியூராம் திருத்தலத்தைத் தரிசித்துப் பின் ஆண்டிருந்த சங்கிலி நாச்சியார் என்பாளையும் மணந்து இன்புற்றனர் என்பதாகும். இச்செய்தி பரவையார்க்கு வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல இருந்தது. "நாம் ஒருத்தி

இருக்க, மற்ருெருத்தியின் மீதும் சுந்தரர் உள்ளம் சென்றதே" என்று துன்பம் மேலிட்டு, நம்பியாரூரர் மீது சினங் கொண்டிருந்தனர்.

நம்பி ஆரூரர் நேரே தம் இல்லமாகிய பரவை யார் திருமாளிகைக்குச் செல்லாமல், ஆரூர்த் தியாகர் அலரடி வணங்கிச் செல்ல வேண்டுமென்று ஆலயம் சென்று வழிபாடு ஆற்றி வருவதற்கு முன், தம் வருகையினை முன் கூட்டிப் பரவை யார்க்கு அறிவிக்குமாறு தம் பரிசனங்களுக்குச் சொல்லிவிட்டனர்.

அவர்கள் பரவையார் மாளிகையை அணுகிச் செய்தியினைச் சொல்ல முனைந்தபோது, சுந்தரர் மீது கொண்ட சீற்றம் காரணமாக, அவர்களை உள்ளே விடவும், வெளியில் உள்ளார் மறுத்து விட்டனர். இதற்குக் காரணம் இன்னது என் பதை அறிந்த சுந்தரர் அனுப்பிய பரிசனங்கள் சுந்தரரிடம் "பெரும! நீர் தொண்டை நாட்டில் திரு ஒற்றியூரில் சங்கிலியார் என்பவரை மணந்ததைப் பரவையார் உணர்ந்து உம்மாட்டுச் சினம் மிகுதியும் கொண்டிருக்கின்ருர். அதனுல் நாங்கள் உள்ளே செல்ல இயலவில்லை" என்றனர்.

நம்பியாரூரர் இதைக் கேட்டுத் துணுக்குற்று, அறிஞர் ஒருவரை அம்மையார் மாளிகைக்குச் சென்று சீற்றம் தணிக்குமாறு செப்பிவிட்டனர். அவர்களும் அப்படியே சென்று பரவையாரைக் கண்டு சமாதான மொழிகள் பல சாற்றியும் அவ்வம்மையார், "பெரியீர்! நம்பி யாரூரரைப் பற்றி ஒன்றும் என்

ணிடம் கூறுதீர். அவர் குற்றம் உடையவர். அவர் சார்பில் மேலும் பேசினுல், என் உயிர் என் உடலில் நில்லாது'' என்று உறுதியாகக் கூறிவிட்டனர்.

சென்ற பெரியவர் அதற்கு மேல் ஒன்றும் பேச வழி அற்றவராய்த் திரும்பித் தேவாசிரிய மண்டபத்தில் அமர்ந்து பலவாறு எண்ணிக் கொண்டிருந்த சுந்தரரை அணுகிப் பரவையார் உள்ளக் கிடக்கையினை உரைத்தருளினுர்.

தம்பிரான் தோழர், ''இனி எம்பெருமானைத் தவிர்த்து இவ் விடர்க்கடலினின்று ஏற்றுவார் எவரும் இலர்'' என்று எண்ணித் திருவாரூர் தியாகேசனை நோக்கி, ''வள்ளலே! என் செயல்களுக்கெல்லாம் காரணம் முன்னை ஊழ்வினை அன்ரே? அதனை முடித்து வைக்கின்றவரும் நீயே அல்லரோ? ஆகவே, பரவையின் பிணக்கத்தினை நீர்தாம் தீர்க்க வேண்டும்'' என்று விண்ணப்பித்துக்கொள்ளும் முறையில், ''இறைவரே! நீர்தாம் தலைவர். நான் உமக்கு அடிமை. மேலும் நீர் எனக்குத் தாயினும் மிக்க அன்புடைய நண்பர் ஆகவே, எனது மனச் சோர்வை உணர்ந்து இன்று இரவே பரவையார் வீடு சென்று, அம்மாது என் மீது கொண்டுள்ள மன மாறுபாட்டை நீக்கி அருளுக' என்று வேண்டினர்.

இவ்வாறு சுந்தரர் வேண்டியதைக் கேட்ட இறைவர் ஆரூரரை நோக்கி ''துன்பம் ஒழிக. யாம் உனக்காகத் தூதனுக இப்பொழுதே பரவை இல்லம் போய்

அவளது பிணக்கத்தையும் போக்குவோம்'' என்று கூறினார். இவ்வாறு அருள் செய்து தியாகர் பரவையார் மாளிகை நோக்கிப் புறப்பட்டார். புறப்பட்டவர் தமது சிவமூர்த்தத்துடன் செல்லுதல் கூடாதென்று, தம்மைத் தினமும் பூசிக்கும் குருக்கள் வடிவுடன் சென்றனர். இவர் சென்ற நேரம் இரவு ஆதலின், கதவு சாத்தப்பட்டிருந்தது. கதவு சாத்தி இருந்ததால் திரும்பிச் செல்லின் சுந்தரர் மனம் துன்புறுமே என்று கதவைத்தட்டி, ''பாவாய், கதவைத் திறவாய்'' என்று கூறியருளினார். இவ்வாறு கூறிய வார்த்தைகளைக் கேட்ட பரவையார் ''இக்குரல் தியாகேசரை அர்ச்சிக்கும் அர்ச்சகர் குரலாகும்'' என்று அறிந்து கதவைத் திறந்து உள்ளே வரவேற்று ஆதனத்து இருத்தி, ''பெரியீர்! இவ்விரவில் நீர் இங்கு எழுந்தருளியது யாது காரணத்தாலோ?'' என்று பணிவுடன் வினவினர்.

பரமனே தூதராக வந்துள்ளார் அல்லரோ? தூதராக வருபவர், சொல்வனவற்றைச் சாதுரியமாகப் பேசித் தாம் வந்த காரியத்தை முடிக்க வேண்டும் என்பதை முன்னரே அறிந்துள்ளோம். ஆகவே, தம், சமத்காரம் தோன்ற ''மாதே, நான் கூறுவதை மாறுமல் செய்வதாயின் நான் வந்த காரணத்தை அறிவிக்கின்றேன்'' என்றனர்.

அம்மையார் அவ்வளவு எளிதில் விடை கூறிவிடுபவரோ? அவரும் மிகுந்த விழிப்போடு ''நீர் கருதியதைக் கூறினால் அஃது என்னால் செய்யக்கூடிய நிலையில் இருக்குமானால், தடையின்றிச் செய்து முடிக்கின்றேன்'' என்றனர்.

உடனே அர்ச்சகர் வடிவில் வந்த ஆரூர்த் தியாகேசராம் தூதர், "மின்னல்போன்ற இடையுடைய மாதே, நம்பி ஆரூரன், இங்கு வர நீ இசைய வேண்டும்" என்றனர்.

அம்மையார் அம்மொழிக்கு விடை பகரும் நிலையில் "பெரியீர்! பங்குனிமாதம் உத்தர நட்சத்திரத்தில் திரும்பி வந்துவிடுவதாகக் கூறிச் சென்ற சுந்தரர், திரு ஒற்றியூரை அடைந்து சங்கிலியார் என்பவரை மணந்து கொண்ட பின், இங்கு அவருக்கு என்ன வேலை? நீங்கள் இந்த இரவில் இங்கு வந்து அவருக்காகப் பரிந்து பேசுவது வெகு நன்றாக இருக்கிறது!" என்று கூறினார்.

இந்தவாறு பரவையார் கூறக் கேட்ட தியாகேசர், "நங்கையே, நம்பி செய்த குற்றங்களை மனத்தில் கொள்ளற்க. கோபம் தணிக. உனது பிணக்கு நீக்க அன்றோ யாம் உன்னைக் கேட்கின்றோம். அப்படி இருக்க நீ மறுத்தல் அடாது" என்றனர்.

பரவையார் தாம் கொண்ட கோட்பாட்டை விட்டுக் கொடுத்திலர். மாதர்கள் எதை இழக்கினும் தம் வாழ்வைப் பங்கிட்டு வாழ எப்போதும் உளம் கொள்ளார். ஆதலின், அந்த முறைமைக்கேற்ப, "ஐயன்மீர்! நம் நம்பியாரூரர் சார்பில் நீர் இங்கு வந்து பேசுதல் உம் பெருமைக்கு ஏற்றதன்று. ஒற்றியூரில் உரிமை கொண்ட வீரரிங்கு வர யான் இசையேன். நீரும் வந்த வழியே செல்லலாம்" என்று கூறிவிட்டனர்.

தியாகேசராகிய தூதர் தாம் யார் என்பதை அப்போது காட்டிக் கொள்ளாமல், பேசாமல் எழுந்து தம் தோழரைக் கண்டு நடந்த வண்ணம் நவின்றார். நடந்ததைக் கூறக் கேட்ட தம்பிரான் தோழர், "ஆ! நீர் சென்று கூறியும் கூடவா என்னை வரச் சம்மதித்திலள். இனி என் உயிர் என் உடலில் இருந்து என்ன பயன்? இறைவரே, நீர் அவள்பால் என்னை இணைத்திலீர் எனில், யான் உயிர் விடுவேன்" என்றனர். தியாகேசர் தம் தோழரது துணிவு கண்டு மீண்டும் பரவையாரிடம் போயினர்.

இதற்கிடையில் பரவையார் "தூதராக வந்தவர் ஆலய அர்ச்சகர் அல்லர். ஆரூர்த் தியாகரே அர்ச்சகர் வடிவில் வந்துற்றனர். அந்தோ! அறியாமல் அடாத வார்த்தைகளைக் கூறி விட்டோமே" என்று அறிந்து பலவாறு எண்ணித் துயில் கொள்ளாது துன்புறுவராயினர்.

தியாகேசர் பரவையார் மாளிகைக்கு மீண்டும் வந்தனர். பரவையார் ஓடோடியும் சென்று மலர்ப் பாதம் பணிந்து வரவேற்றனர். இறைவரும் நங்கையை நோக்கி, "நங்கை பரவாய், நாம் சுந்தரன் பொருட்டு உன்பால் மீண்டும் வந்தனம். நீ அவனை இனி மறுக்காமல் ஏற்று, முன்போல ஒருமனப்பட்டு வாழ வேண்டும்" என்றனர். அது போது அம்மையார், "நீரே வந்து கூறும்போது நான் அவரை ஏற்காமல் இருக்க முடியுமோ?" என்று கூறி வணங்கினார்.

இந்த உறுதி மொழி பெற்ற தியாகராம் தூதுவர், சுந்தரர்பால் வந்து, பரவையார் இணக்க மொழி

யினை எடுத்து இயம்பினர். இந்த மொழிகளைக் கேட்ட நம்பியாரூரர் இன்பக் கடலில் மூழ்கியவராய், இறைவர் திருத்தாள்களை வணங்கிப் பின்பு பரவையார் மாளிகை புக்கனர். பரவையாரும் சுந்தரரை நல்ல முறையில் வரவேற்றனர். அதன்பின் இருவரும் கலந்த அன்பினராய் இல்லறத்தினை இனிது நடத்தி வந்தனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ ?

# 3. அங்கதன்

இராமாயணத்தில் குறிப்பிடத்தக்கவர் ஒரு சிலர் உளர். அவர்களுள் ஒருவன் வாலி. இவனே சுக்ரீவன் தமையன், இராமரால் கொல்லப்பட்டவன். இவனது மைந்தனே அங்கதன். அவனும் தனது பணியினை இராமபிரானுருக்குச் செய்துள்ளான். அப்பணியாவது இ ர ா ம ர் பொருட்டு இராவணன்பால் தூதனாகச் சென்று மீண்டதாகும். தூதராகச் செல்பவர், தூதுரைக்கும் செய்திகளை உரைக்கும் பண்பும், ஆற்றலும் பொருந்தப் பெற்றிருக்க வேண்டுமென்பதை நாம் நன்கு அறிவோம். இப் பண்பும் ஆற்றலும் இவ்வங்கதன்பால் உண்டு. இதனை உணர்ந்த இராமர் இவனையே இராவணனிடம் தூதுவனாக அனுப்ப முடிவு செய்தனர். தம் முடிவினைத் தாமே முடிவு கட்டிவிடாமல், தம்மை அடைக்கலம் புகுந்த விபீடணனுடன் கலந்து ஆய்ந்த பின்பே, அங்கதனைத் தூதனாக அனுப்ப எண்ணினார்.

ஆகவே, இராமர் வீடணனை நோக்கி "வீடணா! இராவணனிடம் தூதன் ஒருவனை அனுப்பிச் சீ தை யி னை விடுகின்றனையா? இல்லையா? என்பதைக் கேட்டறிவோம். இதற்கேற்ப அவன் சீதையைவிட மறுத்தால், பின்பு அவனோடு போரிட்டுச் சீதையை மீட்போம். இதுதான் அறனும் நீதி

யும் ஆகும் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்றனர்.

இவ்வாறு இராமர் கூறக்கேட்ட இராவணனது இளவலாம் விபீடணன் ''இராமா, நீ கூறுவது முற்றிலும் அழகிய கருத்தேயாகும்'' என்று தன் கருத்தினையும் கூறினன். குரங்குகட்குத் தலைவனான சுக்ரீவனும், ''இரகு குலதிலக, தூது போக்குதல் மன்னர்க்குரிய நீதி முறையாகும்'' என்று மொழிந்தனன்.

ஆனால், இலக்குவன் மட்டும், ''அண்ணா பிறரிடம் சென்று ஒன்றை இரப்பது இழுக்காகும். ஆகவே, அம்பு தொடுத்து அரக்கனை அழித்துச் சீதையை விடுதலை செய்தலே உசிதம். இராவணனிடம் தூதனை அனுப்பாது போரில் அவனைக் கொல்வதே முறை. அவன் தேவியைச் சிறையிட்டவன்; தேவர்கட்குத் துன்பம் விளைவித்தவன்; அந்தணர்கட்கு துன்பம் புரிபவன்; உயிர்களை வாட்டி வதைப்பவன்; ஆசையின் மிகுதியினால் அகிலமெல்லாம் தானே ஆள எண்ணமுள்ளவன்; நல்வழியில் நடவாதவன்; நீ துன்புறும்படி உன் தேவியை உன்னை விட்டுப் பிரித்து வைத்தவன்; சீதை மீது இரக்கம் கொண்டு எதிர்த்த சடாயுவையும் கொன்ற மகா பாவி. மற்றொன்றையும் உனக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். நீ கூறியனுப்பும் முறைப்படி அவன் ஒருவேளை சீதையினைச் சிறை நீக்கம் செய்தால், பின்பு போர் நிகழுமா? போர் நிகழாதாயின் இராவணன் கொல்லப்படுவானா? அவன் கொல்லப்பட்டிலன் எனில், அவனுக்குரிய அரசை உன்னை

அடைக்கலம் புகுந்த விபீடணனுக்கு ஈவதாகக் கூறிய வார்த்தையினை நீ எப்படி நிறைவேற்ற முடியும்? ஆகவே, போரிடலே முடிந்த முடிபன்றித் தூதனை அனுப்புவதில் எனக்கு நம்பிக்கை இல்லை" என்று தன் கருத்தை நன்கு எடுத்துக் கூறி முடித்தான்.

இலக்குவன் கூறியவற்றை நன்கு அமைவுறக் கேட்ட இராமர், "தம்பி இலக்குவ! யான் போருக்கு அஞ்சித் தூதனை அனுப்புவதாக எண்ண வேண்டா. அறிஞர்கள் ஆய்ந்து முடிவு கட்டிய அரச நீதியினின்றும் நாம் பிறழலாமா? அரசர்கள் தூதரை அனுப்பியே எதிரிகளின் உள்ளத்தை அறிந்தனர். அதன் பின்பே ஆவன செய்தற்கு முன் வந்தனர். அவ்வாறு இருக்க, நீதி நெறியினின்றும் சிறிதும் பிறழாத சூரிய குல தோன்றல்களாகிய நாமா நீதியினின்று மாறுபடுவது? புயவலி படைத்தவராயினும் பொறுமையோடு பொருந்தி வாழ்வதே வெற்றியுடன் வாழ்தற்கு ஏற்றதாகும்" என்று நீதி நெறிகளை எடுத்துக் கூறினர்.

இவ்வாறு இராமர் விளக்கமாக இயம்பக் கேட்ட யாவரும் தூதனை விடுதல் முறை என்று ஒவ்வினர். பின்னர் யாரைத் தூதனாகப் போக்குவது என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில், இராமர் வாலியின் மகனான அங்கதனையே தூதனாக விடுதல் தக்கது என்றும், பகைவர் தம் வீரத்தால் எது செய்யினும் அதனை எதிர்த்து யாதொரு தீங்கும் இன்றித் திரும்ப வல்ல ஆற்றல்

அவனுக்கே உண்டு என்றும் கூறி வாலியின் மகனை அழைத்து "நீ இராவணனிடம் சென்று சீதையைச் சிறை நீக்கம் செய்கின்றனையா? அன்றிப் போருக்கு வருகின்றனையா? இந்த இரண்டில் எதைச் செய்ய இருக்கின்றாய்? என்று கூறி ஒரு முடிவு பெற்று வருக" என்று ஏவினர்.

தான் தூதனாகச் செல்ல வேண்டிய பொறுப்பு ஏற்பட்டதே என்ற உள்ளக் களிப்பினால் அங்கதன் உடல் பூரித்தனன். அவன் தோள்கள் குன்றினும் பொலிவுற்றுத் தோன்றின.

அங்கதன் இராமர் திருவடிகளில் நிலனுறப் பொருந்தி வணங்கினான். "மாருதிக்கு அடுத்தபடி நம்மைத்தான் இராமர் எண்ணியுள்ளார் போலும்! எனக்கு நிகர் யாவர் உளர்?" என்று எண்ணி மகிழ்வுற்றான். அம்மகிழ்வு காரணமாகச் சிங்கம் ஒன்று ஆகாய வழியே செல்வது போலவும், இராமர் தம் வில்லில் தொடுத்துவிட்ட அம்பு வேகமாகப் போவது போலவும் வான்வழியே சென்றான்.

அரக்கரை வென்று அமைதி நிலவச் செய்யத் திருப்பாற் கடலைவிட்டு நீங்கி அயோத்தியில் வந்து அவதரித்த திருமாலாம் இராமரது சொல்லினைத் தலைமேற் கொண்ட அங்கதன், மேருமலையினும் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த இலங்காபுரியினை அணுகினன்; இராவணனது அரண்மனையை அடைந்தனன்.

இராவணன் தன் சபையில் வீற்றிருந்த தோற்றத்தைக் கண்ட அங்கதன், பலவாறு அவனைப்பற்றி

எண்ணவும் தொடங்கினன். "ஆ! என்ன கம்பீர மான தோற்றம்! இவனைக் கொல்ல ஓர் இமயன்கூட இருக்க முடியுமா? ஆ! என்ன மடமை எனக்கு! இவனைக் கொல்ல இராமர் கை அம்பு உண்டன்ருே? இதனை அறியாது இவ்வாறு கூறிவிட்டேனே?" என்று தன் மனத்துக்குள் ஒன்றுக்கொன்று ஒவ்வாத முறையில் பலவாறு எண்ணினன்.

இவ்வாறு பலவாறு எண்ணிய அங்கதன், கடுமையான கனலும், விடமும், இயமனது கொடுமையும் ஒன்று சேர்ந்து, கைகள் பெற்று, ஒளியுடைய முடி புனைந்து கருங்கடல் உருக்கொண்டு வீற்றிருந்தாற் போல வீற்றிருந்த இராவணன் சபையை நெருங்கினன்.

தன் எதிரே சிறிதும் அஞ்சாது வந்து நிற்கும் அங்கதனைக் கண்ட தசக்கிரீவன் (பத்துத் தலைகளையுடைய இராவணன்) கண்களில் தீப்பொறி பறக்கக் கோபக் குறியுடன், "அடே நீ யாவன்? இங்கு நீ வந்த காரணம் யாது? இங்குள்ளவர் உன்னைக் கொன்று புசிப்பதற்கு முன்பு, நீ வந்த காரணத்தை விரைவில் கூறுக" என்று அதட்டிக் கேட்டனன்.

இந்த வெஞ்சின மொழிகளைக் கேட்ட வாலி மைந்தன் சிறிதும் அச்சம் கொண்டிலன். ஆனல், விலாப் புடைக்க நகைத்திட்டான். என்ருலும், நகைத்த அளவில் நிற்காமல் தன்னை வினவிய வினுக்களுக்கு விடை கூற வேண்டுமென்ற கருத்தினனாய், "இராவணு, என்னை யாவன் என்று வினவுகின்ருய்? யான் சீதை நாயகரான இராமர் விட்ட

தூதன். அவர் கூறி அனுப்பிய மொழியினை உனக்குக் கூறவே ஈண்டு வந்தனன். அவரைச் சாதாரணமானவர் என்று கருதிவிடாதே, அவர் புவிக்கு நாயகர்; தெய்வ நாயகர்; நீ கூறும் வேதநாயகர், விதிக்கும் நாயகர்'' என்று இராமருடைய பெருமைகளை அடுக்கிக் கூறினன்.

இப்படி அங்கதன் அடுக்கி அறைந்திட்ட மொழிகளைக் கேட்ட இராவணன் நகைத்து "குரங்குகளைக் கூட்டிக் கொண்டு சேதுகட்டி உன்னை இங்கு அனுப்பிய நரனையா, நீ உலக நாதன் என்று கூறினை? நன்று நன்று உன் வார்த்தைகள். எனது திருமுன் மும்மூர்த்திகளும் வர அஞ்சுவர். அவ்வாறு இருக்க, நீ ஒரு மனிதன் பொருட்டு அஞ்சாது என் முன் வந்துற்றனை. ஆக நீ யாவன்? உன் வரலாற்றைக் கூறுக'' என்று அதட்டிக் கேட்டனன்.

அங்கதன் ஒரு குறும்புக்காரன். இராவணன் கொட்டம் அடங்க எப்படித் தன்னைப் பற்றிக் கூறினல் நன்கு அமையும் என்று சிந்தித்து நேரே தான் வாலியின் மகன் அங்கதன் என்று கூருமல், "இராவணன் என்பவனைத் தன் வாலில் கட்டி மலைகள் பல தாவிச் சென்றவனும், தேவர்கள் அமுதம் உண்ணத் திருப்பாற்கடலைக் கடையப் பெருந்துணையாய் இருந்தவனும் ஆகிய வாலி என்பானுடைய மகன், யான்'' என்றனன்.

அங்கதன் இவ்வாறு சொல்லக் கேட்ட இராவணன் கோபம் தணிந்தவனய், "ஆ! அப்படியா?

உன் தந்தையான வாலி என் நெருங்கிய நண்பனு வான். உனக்கு யான் வானரத் தலைமையினைத் தாழ்மாது தருகின்றேன். நீ இங்கு வந்தமை குறித்து உளம் மகிழ்கின்றேன். உன் வரவு நல்வரவு ஆகுக. நல்ல காரியம் செய்தனை. என் நண்பன் மகனுத லின் நீ எனக்கும் மகன் என்னும் உரிமையை யான் ஏற்கின்றேன். என்றாலும், என் நண்பனும் உன் தந்தையுமான வாலியைக் கொன்ற ஒரு நரனுக்காக நீ தூதனாக வந்ததுதான் பேதமையாகும். என்றா லும், என்னை அடைந்து விட்டனை. இராமனிடம் கை கூப்பி, வாய் பொத்தி வாழும் வாழ்வினை அகன்று, இங்கு வந்து சேர்ந்து விட்டனை. சீதை யைப் பெற்றேன். உன்னையும் மகனாகப் பெற்றேன். இவற்றினும் எனக்கு என்ன சீரிய வாழ்வு உளது? அந்த நரர்களாகிய இராம இலக்குமணர் இன்றோ நாளையோ அழிந்து போவர். இதில் ஐயம் இல்லை. இஃது உறுதி. வாலியின் அரசை உனக்கே தந்த னன். பல்லூழிக்காலம் அரசு செய்வாயாக. யானே உனக்கு முடி சூட்டு விழா செய்ய, நீ சிங்காதனத் தின் மீது அமர்ந்து, தேவரும் மற்றும் யாவரும் போற்ற அரசு செய்க'' என்று நட்பு முறையும், உறவு முறையும், அன்புடைமையும் உள்ளவன் போல இராவணன் பலவாறு மொழிந்தனன்.

இவ்வாறு உறவும், நட்பும் கொண்ட உளத் தோடு இராவணன் உரைப்பக் கேட்ட அங்கதன், கையோடு கை தட்டித் தோளும், மார்பும், குலுங் கச் சிரித்து, ''இராவணா! இராம இலக்குவர்கட்கா அழிவு ஏற்படப் போகிறது? இலங்கையில் இருப்ப

வர்கட்கு அழிவு ஏற்படப் போகிறதே என்ற காரணத்தால் அன்ருே, உன் தம்பியாகிய விபீடணன் எங்கள் தலைவராம் இராமரைச் சரண் புகுந்தனன். உன் பேச்சு வன்மையால் என்னை உன் வசப் படுத்தப் பார்க்கின்றனை போலும்! தூதுவராக வந்தவர், தூதர் கடமையினை ஆற்ருது, அரசை ஏற்பது அறன் ஆகுமா? அதுவும், நீ கொடுக்க யானு அரசு பெறுவேன்? நீ கொடுக்க யான் பெறுவது, நாய் கொடுக்கும் அரசை சிங்கம் பெறுவது போன்றதாகும்'' என்று கூறிச் சிரித்தான்.

அங்கதன் தன்னைச் சிறிதும் மதியாது கூறும் மொழிகளைக் கேட்டு, அடங்காச் சினமுற்றவனும் "சரி, நீ வந்த காரியம் என்ன?"என்று கேட்டனன். அப்போது அங்கதன், "இலங்கை வேந்த! என்னைக் கருணை வள்ளல் அழைத்து உன்பால் சென்று வருமாறு பணித்துத் 'தேவியை விடுக, அன்றிப் போருக்கு வருக' என்பதை அறிவிக்கக் கூறினன். இரண்டில் எதைச் செய்ய விருப்பம் உளது? உள்ளக் கிடக்கையை ஒளியாது நன்கு சிந்தித்து உரைக்க. ஆனுல், உன்பால் வைத்த இரக்கம் காரணமாக உனக்கு ஒன்று கூறுவல் கேட்டி, உனக்கு நன்மையாவது சீதையை சிறை நீக்கம் செய்து இராமரை வணங்கி உன் சுற்றத்துடன் நல்வாழ்வு நடத்துவதேயாகும். இவ்வாறு செய்யாது போர் இடத் துணிந்தாயாயின் போருக்குப் புறப்படுக' என்றனன்.

இந்தவாறு கூறக் கேட்ட இராவணன் கோபங் கொண்டு, "இவனைப் பிடியுங்கள் ; கட்டுங்

கள்" என்று நால்வரை ஏவினான். இராவணன் கட்டளை ஏற்றவர் அங்கதனைப் பிடித்துக் கொண் டனர். பிடித்தவர்களை அங்கதன் பற்றிக் கோபுர வாயிலில் எறிந்தனன். பின்பு வான வழியே தாவிச் சென்ற அங்கதன், சந்திரன் ஆகாயத்திலிருந்து கீழே இறங்கியது போல இறங்கி, இராமர் திருவடி களில் வணங்கினான். வணங்கக் கண்ட இராமர் சென்று வந்த செய்தியினைக் கூறுமாறு பணித்தனர். அங்கதனும் சென்ற செய்தியினைச் சுருக்கமாகக் கூறத் தொடங்கியவன், "இராமா! நான் முழுமையும் உனக்கு உரைத்து யாது பயன்? இராவணன் மூர்க்கன். அவன், தன் தலைகள் பத்தும் அறுந்து கீழே உருளும் போதுதான் தன் குற்றத்தை உணர்வான். சீதையைச் சிறையிலிருந்து நீக்கச் சிறிதும் விரும்பிலன்" என்று கூறி முடித்தனன்.

# 4. வீரவாகு

சூரபதுமன் என்பவன் மிக மிக வலியன். ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அதிபதி. அவன் தேவர்களுக்கு மிகவும் தீங்கிழைத்தவன். அவர்களைச் சிறைப்படுத்தியவன். அவன் கடல் நடுவில் பல காவலைப் பெற்று விளங்கிய மகேந்திரபுரத்துக்கு அதிபதி. அத்தகையவன் பெறற்கரிய வரமும் திருவும் வாய்க்கப் பெற்றும், அவற்றைக் கொண்டு நன்முறையில் வாழாமல் செருக்குற்று வாழ்ந்து வந்தவன்.

அன்னவனது அட்டகாசங்களைக் கேள்வியுற்ற கந்தப் பெருமான், அவனையும் அவனைச் சார்ந்த அசுரர்களையும் அழித்து விண்ணவர்களைச் சிறையினின்று நீக்கி, அவர்களை முன்போல் விண்குடி ஏற்றத் திருவுள்ளங் கொண்டனன்.

முருகப் பெருமான், எண்ணியபடியே உடனே இயற்றும் போராற்றல் பெற்றிருந்தும் நீதி, நெறியினின்றும் சிறிதும் தவறுதல் கூடாதென்று கருதி, "முதலில் தூதன் ஒருவனைச் சூரபதுமனிடம் போக்கி, தேவர்களைச் சிறை நீக்குமாறு கூறுவோம். அதற்கு அச் சூரபதுமன் இசைந்திலன் எனில், அவனோடு போர் தொடுத்து, அவனையும் அவன் இனத்தையும் மாய்ப்போம்" என்று தீர்மானித்து, தனக்கு நிகரான வன்மை மிக்க வீரவாகு தேவரைச் சூரபதுமனிடம் தூதுவராக அனுப்ப முடிவு செய்

தனர். இந்தக் கருத்துக்குத் திருமால், பிரமன் முதலியோர்களும் ஒவ்வினர்.

பின்னர்க் குமாரக் கடவுள் வீரவாகுவிடம் "வீரவாகு! மகேந்திரம் சென்று, சூரபதுமனைக் கண்டு, இந்திரன் மகனான சயந்திரனையும், மற்றும் உள்ளவர்களையும் சிறை நீக்கச் செய்யுமாறு செப்புக. இதனைச் செய்ய அவன் மறுத்தால், நாளையே போருக்கு ஆயத்தமாக இருக்கும்படி கூறிவிட்டு வருக" என்று கூறி அனுப்பினர்.

வீரவாகு தேவரும் குமாரக் கடவுளை வணங்கி வீர மகேந்திரம் செல்லப் புறப்பட்டார். புறப்பட்டவர் கந்தமாதனப் பருவதம் வந்துற்றார். அங்கிருந்து இடையே கிடந்த கடலினைத் தாவி மகேந்திர புரியினை அடைந்தனர். அடைந்தவர் சூரபதுமனது நகர் வளம் நாட்டு வளம் கண்டு, இந்திரன் மகன் சயந்தன் சிறைப்பட்டுக் கிடந்த இடத்தை அணுகி, அவனைத் தேற்றி, "விரைவில் முருகப் பெருமான் உன்னையும் தேவர்களையும் சிறை நீக்கம் செய்வார். வருந்தற்க" என்று உறுதி கூறிச் சூரபதுமன் சபையினை அணுகினர்.

சூரபதுமன் சிங்காதனத்தில் சிறக்க வீற்றிருந்தனன். தேவமாதர் ஆலவட்டம் வீசிக் கொண்டிருந்தனர். அசுரர் அடைப்பை (வெற்றிலை, பாக்கு முதலியன நிறைந்த பை) தாங்கி நின்றனர். நடன மாதர் நடனமாடிக் கொண்டிருந்தனர். இசைக்கருவிகளில் இசைவாணர் இசையினை இசைத்துக் கொண்டிருந்தனர். இந்த நிலையில் இன்புடன் இருந்த சூரபதுமன்

முன் வீரவாகு தேவர் தோன்றினர். சூரன் வீரவாகு விற்கு ஓர் ஆதனம் அளிப்பதற்குத் தாமதம் செய்யவே, இறைவன் அருளால் ஓர் ஆதனம் அங்கு வந்துற்றது. அதனிடை வீரவாகு அமர்ந்தனர்.

சூரபதுமன் முன் வீரவாகு தேவர் இறுமாப்புடன் வீற்றிருந்ததைக் கண்ட அவையினர் பலவாறு சிந்தனை செய்தனர். சூரனுக்கும் வீரவாகு தேவர் தன் முன் சிறிதும் அஞ்சாது வீற்றிருந்தது குறித்துப் பெருஞ்சினம் எழுந்தது.

''சிறிதும் அஞ்சாது என் முன் அமர்ந்திருக்கும் நீ யாவன். சொல்லுக'' என்று கேட்டனன் சூரபதுமன். உடனே வீரவாகு தேவர் சிறிதும் அஞ்சாது, 'நான் குமாரக் கடவுளால் அனுப்பப்பட்ட தூதன். என் பெயர் வீரவாகு என்பது. உனக்கு நல்புத்தி கூறி நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் பிழைத்து நல்வாழ்வு வாழத் தேவர்களையும் சயந்தனையும் சிறை நீக்குமாறு கூறிப் புத்தி புகட்டி வருமாறு முருகப்பெருமான் என்னை அனுப்பியுள்ளார்'' என்று கூறித் தாம் வந்த காரணத்தை அறிவித்தனர்.

இவ்வாறு கூறியதோடின்றி மேலும், ''ஏ சூரபத்மா ! சத்தியத்திலிருந்து தவறி, கொலை, களவு முதலிய கொடுஞ் செயல்களைச் செய்து, நல்ல பண்பு வாய்ந்த பெரும் மக்களுக்குத் தீங்கு செய்தவர்கள் பொறுக்கமுடியாத பழிக்கு ஆளாவார்கள். விரைவில் மாள்வர். இவர்களே அன்றி இவர்களின் சுற்றமும் அழியும். பல பிறவிகளிலும் துன்பம் துய்ப்பர் (அனுபவிப்பர்). இதனை நீ அறியாதது என்னே? நீ பெற்ற

ஆயிரத்தெட்டு அண்டங்களின் அரசும், அழியா வச்சிர தேகமும் நீண்ட ஆயுளும் மற்றுள்ளனவும் அழிவுருமல் இருக்க, நீ விரும்பினுல் அவர் கூறி யனுப்பியபடி தேவர்களைச் சிறை நீக்குக, பிழைக்க. முருகப்பெருமானின் வன்மையினை நீ, முன்பே அறிந் துள்ளாய். அன்னுர் திருக்கை வேல் உனது இளவலான தாரகனது மார்பையும் கிரௌஞ்ச மலையையும் பிளந்த வன்மை மிக்கது. அஃது உன் மார்பைப் பிளத்தல் அரிதன்று. எளிதே. என்ருலும், சாம பேத தான தண்டமாகிய அரச முறைப்படி உன் மாட்டு வைத்த கருணையினுல் திருச்செந்தூரில் இதுபோது வந்து தங்கியுள்ள குமாரக் கடவுள் உன்பால் என்னைத் தூது விடுத்தனர். ஆகவே, நன்கு சிந்தித்து உனது கருத்தினை வெளிப்படுத்துக'' என்று நயமும் பயமும் கலந்த மொழிகளைக் கூறினர்.

இங்ஙனம் வீரவாகு கூறக் கேட்ட சூரனது கண்களில் தீப்பொறி பறந்தது. சினத்தால் கைகளைத் தட்டி, "ஆயிரத்தெட்டு அண்டங்கட்கு தலைவனுகிய எனக்குப் பல் முளைக்காத பாலனு அறிவு புகட்டுபவன்? வெகு நன்று. வெகு நன்று. தேவர்கள் அசுரர்களுக்குக் கொடுமை செய்தனர். அதனுல் சீற்றங் கொண்ட யான் அவர்கள் செல்வத்தைக் கெடுத்து அவர்களை எனக்குக் குற்றேவல் புரியுமாறு செய்தேன். சிறையிலும் அடைத்தேன். ஆகவே, நீ எத்துணை அளவுக்குக் கூறினுலும் அவர்களை விடுதலை செய்யேன். உனக்குப் பலவாறு மொழிந்து யாது பயன்? நீ சிறு பாலன்

பேச்சைக் கேட்டு இங்கு வந்தனை. நீ தூதுவனாக வந்துள்ளாய் ஆதலால், இவ்விடம் விட்டுப் பிழைத்துப்போக உனக்கு உயிர்ப் பிச்சை தந்தேன். செல்க” என்றனன்.

வீரவாகு சூரபதுமனுடைய வார்த்தைகளைக் கேட்டுச் சினம் பொங்கி, “கீழ்மகனே! எங்கள் குமாரக் கடவுளையா நீ பாலன் என்று எண்ணினாய்? அவர் யாவர் தெரியுமோ? அவரே சிவபெருமானாவர். திருவிளையாடற் காரணமாகக் குழந்தை வடிவு கொண்டனர். அவருக்கும் பரமனுக்கும் வேறுபாடு இல்லை. மணியினின்று ஒலி எப்படி வேறுபடாது வெளிவருமோ, அதுபோல இவ்விருவரும் பேதமற்றவர்கள். ஏகநாயகராம் முதல்வரை நீ பாலன் என்று இகழ்ந்தாய். யான் உன் மொழி கேட்டுப் பொறுத்தனன். உன் நாவை இந்தக் கணம் துண்டித்திருப்பேன். ஆனால், அவ்வாறு செய்யுமாறு ஆறுமுகன் ஆணையைப் பெற்றிலேன். உன்பால் தூதனாக என்னைப் போக விடுத்தனரே அன்றி, நீ சுடுசொல் கூறினால் உன் நாவினைத் துணிக்குமாறு கூறிலர். இன்னமும் உனக்குக் கூறுவன கேட்டி. நீயும் உன் கிளைஞரும் பிழைக்க எண்ணினால், தேவர்களைச் சிறை நீக்கம் செய்க. உனக்குள்ள பகைமையைப் போக்குக. ஆறுமுகக் கடவுள் அடிமலர்களைச் சரணம் புகுக” என்று கருணையும் இரக்கமும் தோன்றக் கழறினர்.

சூரபதுமன் இந்த வார்த்தைகட்குச் செவி சாய்ப்பானோ? அம்மொழிகள் எரியும் கொள்ளி

யில் எண்ணெய் விடுவது போல, அவனுக்கு மேலும் மேலும் சீற்றத்தினை எழச் செய்தன. எனவே, கோபம் கொண்ட அசுரர் குலத் தலைவன், வீர வாகுவை நோக்கி, "தூதனாக வந்தவனே, பல் முனிவாக்காத பாலன் விடுத்த தூதன் நீ என்று உன்னை இதுவரை ஒன்றும் செய்யாது பொறுத்து உன் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தேன். என்று நின்று நீ அகலாமல், அச் சிறுவன் பெருமை களையே பேசிக் கொண்டுள்ளாய். அவன் வீரத் தைப் பற்றி விளம்பிக் கொண்டிருக்கிறாய். நீ கூறு கிறபடி அவன் மேலானவனாயினும் ஆகுக. யான் அவனுக்குச் சிறிதும் அஞ்சேன். யான் தேவர்களை வென்றவன். அப்படி இருக்கத் தேவர்களைச் சிறை யினின்றும் விடுவிக்கக் கனவினும் நினைக்கிலேன்" என்றனன்.

பிறகு, தன்னைச் சூழ இருந்த அசுரர்களை நோக்கி "இவன் தூதனாக இப்போது நம் முன் தோன்றியுள்ளான். ஆதலால், அவனைக் கொல்லல் பழியும் பாவமும் ஆகும். ஆனால், ஒற்றரையும் தூதரையும் சிறையிடல் அரச முறையாகும். ஆகவே, இவனைச் சிறை செய்க" என்ற கட்டளை யினைப் பிறப்பித்தனன்.

கட்டளையினைப் பெற்ற அரக்கர்கள் உடனே எரிபோல் விழித்து, நெருப்பைப் புகை சூழ்வது போல, முன்பு திடுமென வந்த ஆதனத்தில் அழ குடன் வீற்றிருந்த அண்ணலாம் வீரவாகு தேவ ரைச் சூழ்ந்து பற்றத் தொடங்கினர். தம்மைப்

பற்ற வந்த அசுரர்களைத் தம் கையால் பிடித்துச் சூரபதுமன் வீற்றிருந்த சபையிலேயே தரையில் மோதினர். அவர்களுள் சில்லோரின் மார்புகள் ஒடிந்தன. அவற்றினின்று இரத்தம் பீறிட்டது. உயிரும் போயது.

இந்த நிலையில் வீரவாகு தேவர் சூரபதுமனை நோக்கி, "அசுரர் தலைவ! இனி நீ பிழைத்தல் அரிது. எம் குமாரப் பெருமானது கூரிய வேல் உன் மார்பைக் குத்திப் பிளந்தே தீரும். இது திண்ணம். பொய் ஆகாது. அதற்குமுன் நீ துய்க்க வேண்டிய அனைத்தையும் ஆசை தீரத் துய்த்து விடு. நான் விடைபெற்றுக்கொள்கிறேன்" என்று கூறி எழுந்தனர். இவர்க்கு இறைவனால் கொடுக்கப் பட்ட தவிசும் மறைந்தது.

சூரபதுமன் சீற்றத்தின்மேல் சீற்றம் கொண்டவனாய், வீரவாகு தேவரைச் சிறையிடச் சதுமுகன் என்பானை ஏவினன். அவன் வீரவாகு தேவரை நெருங்கிப் பிடித்தபோது அவர் அவனையும் கொன்றார். மற்றும் பலரையும் அழித்து அதன்பின் சூரபதுமனது நகரத்தையும் பாழ்படுத்தினர்.

வீரவாகு தேவர் தம் வன்மையினை வீர மகேந்திர புரியில் காட்டி மீண்டும் கடலைக் கடந்து செந்தில் மாநகர்ச் சேர்ந்து செவ்வேள் பரமன் சேவடி வணங்கினர். குமாரக் கடவுள் வீரவாகு தேவரைப் புன்னகை கொண்டு வரவேற்று, "சென்ற காரியம் யாதாயிற்று?" என்று வினவினார்.

வீரவாகு தேவர் தாம் சென்று சூரனைக் கண்டு தேவர்களைச் சிறை நீக்கம் செய்யுமாறு கூறியும் அவன் அது செய்ய விரும்பாது போருக்கே ஆயத்தமாய் இருப்பதைக் கூறினர்.

இவ்வாறு கூறக்கேட்ட ஏந்தலாம் முருகப் பெருமான் நகைத்து, "நீ தூதனைச் சென்று மீண்டதை மட்டும் கூறினாய். ஆனால், நீ ஆண்டு புரிந்த ஆற்றலை மட்டும் அறைந்திலையே. அதனையும் கூறுக" என்று வற்புறுத்தவே, அதுபோது வீரவாகு தேவர் "யான் சூரன் வாழ் இடமான மகேந்திர புரியினை அடைந்தபோது என்னைச் சில அரக்கர் தடுத்தனர். அவர்களை யான் உம் திருவடி மீது வைத்துள்ள பற்றுக் காரணமாகவும், துணைகாரணமாகவும் அழித்து ஒழித்து மீண்டனன். இதுவே என் ஆற்றலால் புரிந்த அருஞ் செயல்" என்று கூறினர். ஆறுமுகப் பரமனும் அவ்வீர மொழிகளைக் கேட்டு மகிழ்வுற்றனர்.

பின்னர்க் குமாரப் பெருமான் சிறைபடாது தப்பிய சில தேவர்களை நோக்கி, 'தேவர்காள்! நாம் சூரபதுமன் உய்யும் பொருட்டு அரச முறைப்படி தூதனை அனுப்பித் தேவர்களைச் சிறை நீக்கக் கூறினோம். கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது என்னும் முதுமொழிப்படி அச் சூரபதுமன் நம் வார்த்தைகளைக் கேட்டு அவ்வானவரைச் சிறை நீக்கம் செய்திலன். அவனுக்கு அழிவு நேர விதி அமைந்திருக்கையில், எப்படித் தேவர்களை விடுதலை செய்வான்?

ஆகவே, நாளையே அவனை எதிர்க்கப் புறப்படுவோம்' என்று கூறினர். அரி, அயன் முதலிய தேவர்களும் முருகப் பெருமானது கட்டளையைக் கேட்டு அவர் வழி ஒழுகக் காத்து நின்றனர்.

# 5. உலூகன்

மக்களைக் கெடுக்கும் பழக்கங்கள் பலவற்றுள் சூதாடலும் ஒன்ருகும். அதாவது சூதாடுதலும் ஒன்ருகும். இதனை விளக்க வேண்டுமென்ற கருத்தோடுதான் வள்ளுவப் பெருந்தகையார் சூது என்னும் தலைப்புங் கொடுத்து ஓர் அதிகாரமே பாடி, இச் சூதிஞல் விளையக் கூடிய தீமைகளை எடுத்து விளக்கியும் உள்ளனர்.

சூதாட்டம் நமக்குப் பொருள் வருவாயை முதலில் காண்பிக்கும். அவ்வாறு பொருள் வருதலைக் கண்டு அதில் ஈடுபட்டால் பின்னுல் விளையும் பயன் மிக. மிகத் துன்பமேயாகும். இச் சூதிஞல் வரும் சிறு பொருள் தூண்டிலில் இருக்கும் இரையை உண்ண வந்த மீன், தன் உயிரையே இழப்பது போன்றது. ஒரு பொருளைக் கருதி நூறு பொருளை இழக்கச் செய்ய வல்லது இச் சூது. இதனுல் வறியர் ஆக நேரிடும். இன்பம் அடைந்து வாழும் வழியும் ஏற்படாது. இச் சூதாட்டமானது முன்பு இல்லாத துன்பங்கள் பலவற்றைத் தரும். சீர்மையைக் கெடுக்கும். உணவு உண்டு வயிறு நிரம்பி வாழச் செய்யாது. பொருளை அழிவு செய்வதோடு நில்லாமல், பொய் கூறுமாறும் செய்யும். அருட் குணம் அமையப் பெருமல் செய்யும். அந்தோ! இச் சூதிஞல் உடை, செல்வம், உணவு, புகழ், கல்வி ஆகிய இந்த ஐந்தும் அமைய மாட்டா. இவை அமைந்

நிலையினில், மனிதன் மனிதனாக வாழ முடியுமோ? இத்தகைய தீமைகள் இச் சூதாட்டத்தினால் ஏற்படும் என்பதைத் தொகுத்துப் புகழேந்தியார் கூறுகையில், "சூது உடல் வளத்தை அழிக்கும் உண்மை கூறும் பழக்கத்தைக் கெடுக்கும்; கொடைக் குணத்தை ஒழிக்கும்; மானத்தைக் கெடுக்கும்; அன்பைப் போக்கும். சூதினால் விளையும் தீங்கு பலவாகும். ஆகையினால் நல்லவர்கள் இதில் ஈடுபடார்" என்று கூறியுள்ளனர்.

இங்குக் கூறப்பட்ட இன்னல்களுக்கு ஆளானவர்கள் பஞ்ச பாண்டவர்கள். அவர்கள் துரியனோடு சூதாடி நாடு நகரங்களைத் தோற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து, அதன்பின் ஓர் ஆண்டு எவர் கண்ணுக்கும் புலனாகாமல் மறைந்து வாழ்ந்தனர். இப்படி வாழ்ந்த பிறகுதான் அவர்கள் சூதினால் இழந்த நாட்டைத் திருப்பிக் கொடுப்பதாகத் துரியன் வாக்களித்திருந்தான். அந்த வாக்கின்படி நடந்து கொண்ட பஞ்ச பாண்டவர் பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின் தம் நாட்டை மீண்டும் பெறுவதற்கு வழி தேடலாயினர். இதன் பொருட்டுப் பஞ்ச பாண்டவர் கிருட்டிணனோடு ஆலோசிக்கத் தொடங்கினர்.

மாயன் பஞ்ச பாண்டவர்களை நோக்கி, "நீங்கள் சூதாடி நாடு நகரங்களை இழந்தீர். அந்நாடு நகரங்களை மீண்டும் பெற வேண்டினால், முன் ஆடிய சூதினை மீண்டும் ஆடியே பெறுதல் முறையாகும். போர் தொடுத்து வில்லாண்மை காட்டிப் பெறுதல்

[illegible] முறை அன்று" என்று தன் கருத்தைக் கூறினான்.

பாண்டவர்கள் கூட்டிய ஆலோசனைக் குழுவில் கிருட்டிணனது தமையனான பலராமனும் இருந்தனன். அவனுக்கு நாட்டை துரியனிடமிருந்து மீட்பது குறித்து அவ்வளவு பிடித்தம் இல்லை. ஆகவே, அவன் "தருமா, நீங்கள் சூதாடி உமது நாடுகளைப் பறி கொடுத்து விட்டீர்கள். ஆகவே, துரியன் நீங்கள் தோற்ற நாடுகளைத் தன் ஆட்சிக் கீழ் உட்படுத்திக் கடந்த பதின்மூன்று ஆண்டு காலம் ஆண்டு வருகிருன். அவற்றை மீண்டும் பெற நினைப்பது நல் கொடிது" என்று கழறினுன். இந்த வார்த்தையைக்கேட்ட சாத்தகி என்பான் பலராமனை நோக்கி, "நீ கூறிய வார்த்தைகள் பொருள் அற்றவை" என்று கடிந்து மொழிந்தனன்.

இந்த நிலையில் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணான முறையில் அவையில் இருந்தவர்கள் ஒவ்வொருவரும் கூறக் கேட்ட கிருட்டிணன், "சரி, நாம் இனித் துரியனிடம் தூதன் ஒருவனை அனுப்புவதே சாலச் சிறந்ததாகும். ஆகவே, உலூக மா முனிவரைத் துரியோதனன் தந்தையாராகிய திருதராட்டிரரிடம் தூதுவராக அனுப்பி, அவர் கருத்தை அறிவோம்" என்று முடிவு கட்டினன்.

இம் முடிவினைத் தலைமேற் கொண்ட தருமர் உலூகமா முனிவரைத் தூதராக அனுப்ப முடிவு கொண்டார். தருமர் உலூகமா முனிவரை வணங்கி, "முனிவரே, நீர் எம்பொருட்டுத் துரியன் தந்தையாராகிய திருதராட்டிரரிடம் தூதராகச் சென்று, எம்

கருத்தினை அவரிடம் கழறுங்கள். எனது பணிவான வணக்கத்தினை வீடுமருக்கும் (பீஷ்மருக்கும்), விதுர ருக்கும், துரோணாச்சாரியாருக்கும் அறிவியுங்கள்" என்று சொல்லி அனுப்பினார்.

உலூகமா முனிவர் முரசக் கொடியோராகிய தருமர் விரும்பியபடி, அரவக்கொடியோனும் துரியன் அரசு புரியும் அத்தினாபுரிக்குச் சென்றார். திருத ராட்டிரரும் உடன் இருந்த துரியன் சபையினை அணு கினர். வந்தவர் முனிவர் ஆதலின், துரியோதனன் நன்முறையில் அவரை வரவேற்று, திருவடிகளை வணங்கி ஆதனம் அமர்த்தி, அதில் அமர வேண்டி னான். முனிவரும் அதில் அமர்ந்தனர். வீடுமர், விது ரர் முதலியவர்களும் உளம் கலந்த அன்புடன் உலூ கர்க்கு வணக்கம் செய்தனர். அதன் பின் அங்கு இருந்தவர்கள் முனிவர் வந்த காரணத்தினை வினா வத் தொடங்கினர்.

உலூகமா முனிவர் தருமர் கூறியனுப்பியபடி முதலில் வீடுமர், விதுரர், துரோணர் முதலியோர்க் குத் தருமர் வணக்கம் கூறச் சொன்னதைக் கூறிப் பின்னர்த் திருதராட்டிரர், துரியன், கன்னன், சகுனி ஆகியோர் மனம் வேகும் வண்ணம் தாம் வந்த காரணத்தைக் கழறத் தொடங்கினார் :

"துரியோதனாதியர்களே, பஞ்ச பாண்டவர் உம் முடன் சூதாடி நாடு நகரங்களைத் தோற்றனர். பின்னர் உம் கட்டளைப்படி பன்னிரண்டு ஆண்டு கள் காட்டில் வாழ்ந்து, அதன் பின் ஓர் ஆண்டு எவரும் அறியா வண்ணம் மறைந்து இருந்து இப் போது வெளிப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறு

வாழ்ந்த பின்னர் நாட்டிற்கு வந்தால் வென்ற நாடுகளை மீண்டும் அவர்கட்கு அளித்திடுவதாக வாக்களித்த வண்ணம் அவர்கட்குரிய நாட்டினை நீங்கள் அளிப்பீரோ? அளியீரோ? உமது கருத்தினை அறிவியுங்கள். போர் தொடுத்து நாட்டைப் பெறுதல் அவ்வளவு பொருத்தமாகப் புலப்படவில்லை. நீங்கள் முன்னர் ஆடிய சூதினை மீண்டும் ஆடி அவர்கள் தோற்ற நாட்டைப்பெறுதற்கு ஒரு வாய்ப் பினைத் தருக. இல்லையேல் சண்டை செய்து அப் பாண்டவர்கள் தாம் இழந்த தம் நாட்டைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று கூறினும் கூறுக" என்று கூறி மேலும், "போர் ஏற்படின், நீங்கள் வெற்றி காணுதல் அரிது. பாண்டவர்கள் வெற்றி பெறுதல் திண்ணம். வீரமிக்க வீமனும், அர்ச்சுனனும் போரில் ஈடுபட் டால் நீங்கள் அழிதல் திண்ணம். இஃது உண்மை. முனிவனாகிய என் உரை பழுதாகாது" என்று அஞ் சாது அறைந்திட்டார். இத்தகைய துணிவு துறவி களிடத்து அமைந்திருப்பதனால் அன்றோ, தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமானார் "வீரம் என்னால் விளம்பும் தகையதோ?" என்று விளம்பியும் உள்ளார்.

உலூகமா முனிவர் உரைத்த மொழிகளைக் கேட்ட அரவக் கொடியோன் ஆத்திரம் கொண்ட னன். உடனே முனிவரைப் பார்த்து, "நீங்கள் புகழும் வீமார்ச்சுனர் வீரத்தையும் எமது வீரத்தை யும் இப்போது ஒப்பிட்டுப் பார்ப்பதில் பயன் இல்லை. போர் முகத்தில பார்த்துக்கொள்ளலாம்" என்று பட படத்துப் பகர்ந்தான்.

இந்தவாறு பாம்புக் கொடியோன் பகர்ந்ததைக் கேட்ட வில்விதுரர் துரியனை நோக்கி, "துரியா, அவசரப்பட்டு அறையாதே. முனிவர் கூறியபடி நாட்டினை அவர்கட்குத் தந்து விடு. அப்படித் தராமல் இழிசினர் மொழிகளைக் கேட்டு நடப் பாயானால் திருமகள் உன்னை விட்டு விலகு வதோடு அல்லாமல், நம் சுற்றமும் சேனையும் அழியும்" என்று அன்புடன் எடுத்துக் கூறினர்.

பிறகு துரோணாசாரியாரும், கிருபாசாரியாரும் துரியனைப் பார்த்து, "துரியா, நீ முன் சொன்ன வாக்குப்படி அப் பஞ்ச பாண்டவர்கட்கு நாட்டை அளித்து விடு. இதுதான் அறம். இவ்வாறு செய் யாமல் படை திரட்டிப் போருக்கு ஆயத்தம் ஆதல் பெரும் பிழையாகும். முனிவர் கூறியபடி அர்ச்சு னன் தன் வில்லை வளைத்துச் சமர் செய்ய முன் நிற் பானாகில், அவன் முன் எந்த வில்லி எதிர் நிற்க இய லும்?" என்று கூறினர்.

வீடுமரும் திருதராட்டிரரைப் பார்த்து, "திருத ராட்டிரா! உன் இளவலான பாண்டுவின் குமாரர் களான பஞ்ச பாண்டவர்கள் கழித்து வரவேண்டிய காலமாகிய பதின்மூன்று ஆண்டுகளும் கழிந்தன. அவர்கள் துரியன் கூறியபடி தம் நாட்களைக் கழித்த பிறகே வந்து நாட்டினை நல்குமாறு கேட்கின்றனர். அவர்கட்கு அந்நாட்டினைத் திருப்பித் தந்து விடு தலே தக்கது. அவ்வாறு இன்றிப் போர் புரிதல் முறையன்று. அர்ச்சுனன் முன் எவரும் அமர் செய்ய இயலாது" என்று உண்மையினை ஒளியாமல் சிறிது சினத்தோடு கலந்து உரைத்திட்டார்.

இவ்வாறு வீடுமர் புகலக் கேட்ட கன்னன் பொறுத்திலன். அவன் ஒரு சிறந்த வில்லாளி. ஆகவே, காங்கேயனுகிய வீடுமரை நோக்கி, "பெரியீர், என் போன்ற வில்லாளி ஈண்டு வீற்றிருக்கப் பொதுவாக இவ்வாறு இழித்துப் பேசலாமோ?" என்று சினத்துடன் வினவலானுன். வீடுமருக்குக் கன்னன் கழறிய மொழிகளைக் கேட்டதும் கோபம் வந்தது. அக் கோபத்தைக் கோப மொழியுடன் பேசி வெளிக் காட்டாமல் சாந்தமான மொழிகளில் கன்னனுக்கு நல்ல புத்திமதிகளைக் கற்பித்து அவன் தலை குனியும் வகையில் அவனைப் பார்த்து, "கன்ன, நீ சிறந்த ஆண்மையும் வில் வன்மையும் உடையவன் என்பது நன்கு வெளியாகியது. துருபதனுடைய மகள் திரௌபதியை மணம் முடித்த நாளில், நீ தானே அந்த அர்ச்சுனனுடன் எதிர்த்துப் போரிட்டு வென்றவன்! கந்தருவருள் ஒருவனுகிய இந்திரசேனன் துரியனைக் கட்டித் தூக்கிச் சென்ற போது, அந்தக் கந்தருவனேடு போரிட்டுத் துரியனை மீட்டவன் நீ தானே!" என்று வஞ்சப் புகழ்ச்சியோடு பேசி மேலும் அவர் "நீ வீரம் பேசுவதில் யாது பயன்? நீயா, கண்ணன் தேரினைச் செலுத்தப் போர்க் களத்தில் பொலிவுடன் தோன்றும் அர்ச்சுனன் முன் எதிர் நின்று போர் செய்ய வல்லவன்?" என்று பழிப்பும் இழிப்பும் கலந்து பகர்ந்திட்டார்.

இந்தவாறு வீடுமர் புகலக் கேட்ட துரியன் மேலும் சினம் கொண்டு, தூது உரைக்க வந்த உலூக மாமுனியைப் பார்த்து, "முனிவரே, நீர்

மீண்டு செல்க. நாட்டை யான் கொடேன். நாடு எம்முடையது" என்று தன் உள்ளத்தின் எண்ணத்தை ஒளியாது உரைத்திட்டான்.

இவ்வாறு உரைக்கக் கேட்ட உலூகமா முனிவர் வேறு ஒன்றும் அவனிடம் கூறாமல் பாண்டவர்பால் மீண்டு, துரியன் கூறிய மொழிகளை மொழிந்திட்டார்.

# 6. சஞ்சயன்

பஞ்சபாண்டவர்களால் அனுப்பப்பட்ட உலூக மாமுனிவர் துரியன்பால் தூது சென்று மீண்ட செயல் முன்னர்க் கூறப்பட்டதன்றே? அதன்பின் கௌரவர் (துரியோதனாதியர்) தாம் சும்மா இருத்தல் அடாது என்று சிந்தித்துத் தாமும் ஒரு தூதுவரைப் பாண்டவர்பால் அனுப்பித் தம் கருத்தை உணர்த்த எண்ணினர். அதன் பொருட்டுப் பாண்டவர் எப்படி முனிவர் ஒருவரை அனுப்பினரோ அதுபோலவே, துரியோதனாதியரும் தருமர் ஆகியோர்க்கும் தம் உள்ளக் கருத்தை ஒளிக்காமல் உரைக்க ஒரு முனிவரைத் தூதராக அனுப்ப உளம் கொண்டனர். அதன்படி சஞ்சயமா முனிவரை அனுப்புவதாகத் தீர்மானித்தனர். சஞ்சய முனிவரை வருமாறு ஆளைப் போக்க, அவரும் அத்தினாபுரம் வந்து சேர்ந்தனர்.

திருதராட்டிரர் பஞ்சபாண்டவரின் பெரிய தந்தையாரேயானாலும் பட்சபாத முடையவராகவே இருந்தனர். பாண்டவர்கள் திருதராட்டிரரின் இளவலான பாண்டுவின் புதல்வர்கள் ஆவர். முறைப்படி தமக்கும் புத்திரர்கள் தாமே என்பதைத் திருதராட்டிரர் எண்ணாமல், தம் உரிமை மக்களாகிய துரியோதனாதியர் பக்கமே சார்ந்து . பேசலுற்றார். கண்ணிலாராகிய திருதராட்டிரர் சஞ்சய முனிவர்

வருகையைச் சொல்லக் கேட்டு அவர் திருவடிகளை வணங்கிக் கீழ் வருமாறு கூறத் தொடங்கினர் :

"முனிவரே! நீர் குருகுலத்து அரசர்களுக்குரிய தொழில்களைக் கற்பிக்கும் குரு ஆவீர். கௌரவர் பாண்டவர் ஆகிய இரு பிரிவினரும் நீர் கூறும் மொழிகளை என்றும் மறுத்துப் பேசுபவர் அல்லர். இவர்கள் இப்பொழுது ஒருவர்க்கொருவர் பகைமை கொண்டு பலபடி பேசிக் கொள்கின்றனர். இவர் கட்கு இடையேயுள்ள பிணக்கை நீர்தாம் போக்க வேண்டும். அவ்விரோத மனப்பான்மை ஒழிந்து கௌரவர்கள் இவ்வுலகை ஆளுதற்கான வழி வகைகளை நீர்தாம் செய்யவேண்டும். நீர் நேரே பஞ்சபாண்டவர்கள் உறைவிடம் சென்று அவர்களை மீண்டும் காட்டகமே திரும்பி அருந்தவங்களைச் செய்து நற்கதி அடையும்படி கூறவும்" என்று சிறிதும் இரக்கம் இன்றி இசைத்தனர்.

சஞ்சய முனிவர் திருதராட்டிரர் கூறிய கூற்றினைச் சிறிதும் மறுத்திலர். அப்படியே சென்று திருதராட்டிரர் எண்ணத்தை இயம்பி வருவதாகக் கூறிப் புறப்பட்டார். புறப்பட்டவர் பாண்டவர் இருந்த இடத்தினை வந்து அடைந்தனர். வந்தவர் முனிவர் ஆதலின், பாண்டவர் அவரை நன்முறையில் வரவேற்றனர்; அவர் திருவடிகளில் தம் சென்னி பொருந்த வணங்கி எழுந்தனர். முனிவரும் அவர் கட்கு வாழ்த்துக் கூறி அமர்த்தினர். தாமும் நல்லதோர் ஆதனத்தில் அமர்ந்தனர். பின்னர்த் தாம் வந்த காரணத்தை அறன் மைந்தன் (தருமர்) உட்

பட அனைவரும் கேட்கும் முறையில் உரைக்கலுற்றார்.

“பஞ்சபாண்டவர்களே! நீங்கள் நாட்டை ஆளும் நிலைமையை ஒழித்துக் காட்டிடமே உமக்கு உரிய இடமாகக் கொண்டு தவத்தை மேற்கொண்டீர்கள். இச் செயல் உங்கட்குச் சீரிய செயலாகும். அறிவீனர் தாம் நிலையற்ற செல்வத்தை விரும்பி, அதனைச் சின்னாள் ஆண்டு அனுபவித்துப் பின்னர் ஆறாத்துயரத்தில் ஆழ்வர். மேலும், கூறுவதைக் கேளுங்கள். எத்தனையோ பிறவிகள் இருக்க, அப் பிறவிகளில் எல்லாம் புகாமல் மானிடப் பிறவியில் பிறந்து வாழ்தல் இனிது. இங்ஙனம் மானிடராய்ப் பிறந்தாலும் உலக மாயையை ஒழித்து ஞானிகளாய் விளங்குதல் அருமையிலும் அருமை ஆகும். ஞானிகளாகி விளங்கிய பின்னர் வீட்டின்பத்தை அடைதற்கான அறிவினைப் பெறுதல் அதனினும் அரிது. இந்த அருமைப் பாடுகள் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக நீங்கள் பெற்றுள்ளீர்கள். உம் பங்காளியான துரியன் உங்கட்குரிய நாட்டை அவன் கூறிய வாக்குப்படி கொடுக்கவும் மாட்டான். அவன் உங்களோடு ஒற்றுமை கொண்டு வாழவும் சம்மதியான். உங்களோடு போரிடவே துணிந்துள்ளான். ஆகவே, நீங்கள் உமக்குரிய தாய பாகத்தை மறந்திடுங்கள். பழையபடி தவமேற்கொள்ளுங்கள். இத்தவம் உங்களுக்கு என்றும் அழியாப் பேர் இன்ப உலகில் கொண்டு சேர்க்கும். துரியன் முதலியோர் பேராசை யுடையவர்கள். சிறிதும் உள்ளத்தே அன்பில்லாதவர்கள். என்ன கூறினாலும்

கேளாத அசடர். நீங்கள் யான் கூறுவதைக் கேளுங்கள். நீங்கள் மண்ணாசையை மறந்திடுங்கள். அரச பதவியில் ஆசை கொள்ளாதீர்கள். போர் ஆசை உங்களுக்குப் பொருத்தம் அற்றது. இவையே யான் உங்கட்குச் சொல்லக் கூடியவை'' என்று கூறினார்.

இங்ஙனம் சஞ்சய முனிவர் கூறக் கேட்டதும் சினம் கொள்ளாத தருமரும் சிறிது சினங்கொண்டனர். தாம் சினங்கொண்ட குறிப்பைச் சில மொழிகள் மூலம் வெளிப்படுத்தினர். முனிவரை நோக்கி, ''முனி சிரேஷ்டரே, அரசர்கள் தம் அரச கடனை ஆற்றாது காடு புகுந்து அருந்தவம் புரியும் கடமை கடமை யாமோ? அரசபதவியில் வாழ்வாங்கு வாழ்ந்த பின்பு அன்றோ காடு புகுந்து கடுந்தவம் புரிந்து கடவுளடி பற்றுதல் வேண்டும்? அரசர்கள் தம் பகைவரை ஒழித்து நாட்டில் அமைதியினை நிலை நிறுத்திய பின்பே தாம் நல்வழி நாடுதற்கான அறங்களைச் செய்யவேண்டும்'' என்று அரசர்களின் கடமைகளைக் கழறினார். தருமரே இப்படிப் பேசத் தொடங்கினால் அவர் பின் தோன்றல்களான வீம அர்ச்சுன நகுல சகாதேவர்கள் எண்ணத்தைச் சொல்லவா வேண்டும்?

வீமன், முனிவரை நோக்கினான். முனிவரை நோக்கும் போதே அவன் கண்கள் சிவந்தன. தீப் பொறிகள் பறப்பன போல் சில மொழிகளைக் கூறலானான். அப்போது அவன் கூறிய மொழிகள் இடி இடிப்பது போன்றிருந்தன. அவன் முனிவரை நோக்கி, ''முனிவரே, நீர் எங்கட்குப் பிரம்ம குரு

ஆவீர். அப்படி இருக்க, நீர் எம் பகைவராகிய கௌரவர் சார்பில் பேசுதல் உமக்கு அடுக்குமோ? அத்துரியோதனாதியர்தாம் நாங்கள் அனுப்பிய உலூகமா முனிவரிடம் போருக்குத் தயாராக இருப்பதாகக் கூறி அனுப்பியுள்ளனரே. எம்மூத்த தந்தையார் உம்மிடம் கூறியனுப்பியவை தக்கவை அல்ல. அவர் தம் மக்களையும் எம்மையும் ஒரு படித்தாகக் காண வேண்டும். நம் முகத்தில் வலப்பக்கம் ஒரு கண்ணும் இடப்பக்கம் மற்றொரு கண்ணும் இருந்தால் இவற்றிற்குள் உயர்வு தாழ்வு கருதலாமோ? இவற்றினிடத்தில் வேற்றுமையைக் காணலாமோ? அப்படி வேற்றுமை காண்பது போல அன்றோ இருக்கிறது திருதராட்டிரருடைய கருத்துரை! போர் முனையில் என் கதை கொண்டு மோதும் திறத்தை நீரே உம் கண்கொண்டு காணுங்கள். எம்போன்ற சுத்த வீரர்கட்கு நீர் கூறும் தவம் தவமாகாது.

"முனிவரே, நீர் மொழிந்திடும் தவம் அருந்தவம் அன்று. பகைவர் உடல் போரில் வெட்டுண்டு செந்நீரில் மூழ்கி, தலைகளும், தலையற்ற முண்டங்களும் பொருந்திய போர்க்களத்தில், இடையே, ஊடுருவிக் கிடக்கும் வெம்பகையினை ஒழிப்பதே எம்போன்ற வீரர்க்கு வீர சுவர்க்கம் புகுதற்குரிய தவமாகும். ஆகவே, போர்க்களமாகிய யாகசாலையில் துரியன் முதலான யாகப் பசுக்களைப் பலியிட்டு, கள வேள்வி (போர்க்களத்தில் செய்யப்படும் யாகம்) செய்ய எண்ணியுள்ளேன்" என்று தன் வீரம் தோன்ற விளம்பினான். இன்னமும் மேலே பேசத் தொடங்கு

வானோ என்ற எண்ணத்தால் கிருட்டிணன் வாயு புத்திரனான வீமனை அமைதியுறுமாறு கூறி, பின் சஞ்சய முனிவரைப் பார்த்து, "முனிவரே இவ்விரு பகைவர் கூட்டத்திற்கு இடையே நாம் பேசி யாது பயன்? இப்பஞ்ச பாண்டவர்கள் தாமே இப்பூமியினை ஆளுதல் தவம் என்றும், கௌரவர்கள் விண்ணுலகம் புகுதல் தவம் என்றும் கருதுகின்றனர். ஆகவே, நீர் மீண்டும் சென்று துரியோதனாதியர்கட்குப் பாண்டவர் கருத்தைப் பகர்ந்திடுவீராக" என்று மொழிந்தனன்.

சஞ்சய முனிவர் அதற்குமேல் ஒன்றும் பேசிற்றிலர். கண்ணன் கழறியபடியே அத்தினபுரம் நோக்கிப் புறப்பட்டனர். துரியனையும் திருதராட்டிரரையும் கண்டு தருமர் கூறிய மொழிகளையும் கண்ணன் மொழிந்த மொழிகளையும் வீமன் மொழிந்த வீர மொழிகளையும் ஒன்றையும் விடாது உரைத்திட்டனர்.

# 7. கண்ணன்

தருமர் முதலிய ஐவர் பஞ்ச பாண்டவர் என்றும் துரியன் முதலிய நூற்றுவர் கௌரவர் என்றும் கூறப்படுபவர் என்பது நீங்கள் அறிந்ததுதானே? இவர்கள் ஒருவர்க்கொருவர் பங்காளிகளாயினும் பகைவர்களாகவே இருந்தனர். இப்பகைமை கௌரவரிடத்திலிருந்து எழுந்ததே அன்றிப் பாண்டவரிடத்திலிருந்து பிறந்த தன்று.

தருமர் ஊழ்வலி காரணமாகத் துரியனுடன் பந்தய மிட்டுச் சூது ஆடித் தமக்குரிய சொத்துச் சுதந்திரங்களைத் தோற்றனர். இங்ஙனம் தோற்றவற்றை மீண்டும் பெற விரும்பினால், பாண்டவர் பன்னிரண்டு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்து பதின்மூன்றுவது ஆண்டு தாம் இருக்கும் இடம் இன்னது என்பது ஒருவரும் அறியாத நிலையில் தம் உருவினை மறைத்து வாழ்ந்து நாட்டிடை வந்தால் இழந்த உரிமைகளை ஈவதாகத் துரியன் கூறியிருந்தனன். இந்த நிபந்தனைகளையும் நீங்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள். அங்ஙனமே பாண்டவர் ஐவரும் பன்னிரண்டாண்டுகள் காட்டில் இருந்துவிட்டு, ஓர் ஆண்டு விராடபுரத்தில், அந்நகரத்து மன்னனும் அறியாத நிலையில் தம்மை வெளிப்படுத்தாது இருந்து, தம் உரிமை பெறத் துரியனிடம் தூதனாகக் கண்ணனை அனுப்புவதென ஐவரும் முடிவு

செய்தனர். அவ்வாறே கிருட்டிணனும் துரியன்பால் தூதுவனாகச் செல்ல உளம் கொண்டனன்.

கண்ணன் துரியோதனர்பால் தூது போவதற்கு முன், தருமரையும், அவர் தம் தம்பிமார்களையும் உடன் வைத்து, ஓர் ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். அதுபோது, கிருட்டிணனே அக் கூட்டத்தின் தலைவனாக இருந்து ஐவருடைய கருத்துக்களையும் கூறுமாறு கேட்டனன். அவ்வாறே ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தம் தம் கருத்துக்களைக் கூறத் தொடங்கினர்.

முதலில் தருமர் கிருட்டிணனை நோக்கி, "கண்ணா! துரியோதனாதியர் போர் வேண்டும் என்று சஞ்சய முனிவரிடம் கூறி அனுப்பினாலும், நாம் அரச நீதி தவறி உடனே போருக்கு ஆயத்தம் ஆதல் கூடாது. இது மன்னர் கடமையும் ஆகாது. பகை என்னும் நெருப்பை மிகவும் மூட்டி, வளர்த்தால் சண்டையில் இரு பக்கத்தினரும் இறக்க நேரிடும். ஒரே குளத்தில் தாமரை மலரும், அல்லி மலரும் வளர்ந்து, பூத்து விளங்குவது போல, கௌரவ பாண்டவர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வு நடத்துவதே முறை. ஆகவே, அரவக்கொடியோனிடம் சமாதான மொழிகளையே சாற்றி வருக. துரோணர் முதலிய ஆசிரியர்களையும் வீடுமர் முதலிய பெரியோர்களையும் மற்றும் துணைவர்களாக உள்ள துரியோதனாதியரையும் போரில் வென்று இவ்வுலகை ஆளுவதை விட, முன்போலக் காட்டில் இரவும் பகலும், காய்கனி, கிழங்கு முதலிய

வற்றை உண்டு வாழ்வதே நல்லது. இனிதும் ஆகும்'' என்று கூறினர்.

இவ்வாறு தருமர் கூறியவற்றைக் கேட்ட கண்ணன், "தருமா! நீ போருக்குப் பயந்து மீண்டும் காடு நோக்கிச் சென்றல், உன்னையும் உன்னைச் சார்ந்தவர்களையும் மண்ணுலகத்தினர் இழித்துப்பேச மாட்டார்களோ? நீங்கள் முன்னர் அரச சபையில் மொழிந்த சபதங்களை எப்படி நிறைவேற்றுவீர்கள்?'' என்று தூண்டினன். இப்படிப் பரந்தாமன் பகர்ந்ததைக் கேட்ட பொறுமைக் குணத்தவராம் முரசக் கொடியோர், "கண்ணா! நீ கூறுவதும் முறையே ஆகும். ஆகையால், நீ கௌரவர்பால் தூதனாகச் சென்று எங்கட்குக் கொடுத்து விடுவதாக கூறிய நாட்டைக் கேள். நாடு தர மறுத்தால் ஐந்து சிற்றூர்களையாகிலும் கொடுக்குமாறு கூறு. அவற்றையும் கொடுக்க மறுத்தால் நாங்கள் தனித்தனி வாழ ஐந்து வீடுகளையாகிலும் தருமாறு வேண்டு. இவற்றையும் அவன் தர எண்ணம் கொள்ளவில்லையென்றல் போர் வேண்டுக'' என்று தம் கருத்தைக் கூறினர்.

இவ்வாறு அறத்தின் வடிவமான தருமர் கூறக் கேட்ட வீமனுக்கு ஆத்திரம் மிகவும் பொங்கி எழுந்தது. "கண்ணா, என் அண்ணர் இப்படிக் கெஞ்சிக் கேட்குமாறு கூறுகின்றரே. இவர் இன்னமும் பகைவனை ஒழிக்காமல் இருக்க எண்ணுகிறரே. அரசசபையில் ஏற்பட்ட அவமானத்தைப் போக்கிக் கொள்ள வேண்டாவா?'' என்று கூறிவிட்டு, தன் அண்ணாராகிய தருமரைப் பார்த்து, "அண்ணா! நம்மைக் காட்டுக்கு அனுப்பிய துரியனையும், அவனைச் சார்ந்த

வரையும் கொன்று உன்னை அரியாசனத்தில் வைக்கின்றேன். அவ்வரவு உயர்த்தவனையும் மேலுலகு சென்று அரசாளுமாறு செய்கிறேன். (அதாவது அவனையும் கொல்வேன் என்பது கருத்து). இனித் தூதுவரை அனுப்பவேண்டா. முன்னர் நாம் உலூகரைத் தூதராக விடுத்தது சாலும்" என்று சினத்துடன் மொழிந்தான்.

தருமர் மிகவும் பொறுமையுடையவர் அல்லரோ? வீமனுடைய வீர மொழிகளைக் கேட்டு, அவனை அமரச் செய்து, "தம்பி, வீமா, குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை. ஒரு குலத்தில் பிறந்த நாம் ஒற்றுமையுடன், வாழ வழிகாணவேண்டும். சாம, பேத தான தண்டம் என்ற முறை வைப்பில் போர் ஈற்றில் தானே பொருந்தி இருக்கிறது?" என்று தணிவு தோன்றச் சாற்றினர்.

இவ்வாறு தன் தமையனர் சொல்லக்கேட்ட வாயுபுத்திரன், "அண்ணு! உம் விருப்பப்படியே மீண்டும் ஒரு தூதரை அனுப்புவோம். அப்படித் தூதுவர் ஒருவரை அனுப்புவதாயின், என் எண்ணமும் பாஞ்சாலி எண்ணமும் நிறைவேற என்னைத் துரியன்பால் தூதனுக விடுக. கிருட்டிணன் தூதனுகப் போக வேண்டா" என்று வேண்டினன்.

மாயோன் வீமனுடைய வார்த்தைகளைக் கேட்டு, "வீமா! முன் பிறந்தவர் அரசமுறையினை உரைத்தல் அதனைக் கேளாது நம் விருப்பப்படி நடப்பது முறையன்று. பொறு" என்று கூறி அர்ச்சுனனை நோக்கி அவனது கருத்தையும் கூறுமாறு பணித்தனன்.

அர்ச்சுனன் தருமரையும், மணிவண்ணனையும் வணங்கி, "நாம் பொறுத்த பொறுமைகள் போதாவா? இன்னமும் அறத்தைப்பற்றி அறைந்து கொண்டிருந்தால் யாது பயன்? நாம் எப்போது நம் பகைவனை ஒழிப்பது? திரௌபதையின் கூந்தல் எப்போது முடிக்கப்படுவது? யான் தேவர்களையும் வெல்லக்கூடிய அம்புகளைக் கொண்டிருந்து யாது பயன்? நமக்கு ஏற்பட்டுள்ள மாசு தீர வேண்டாவா? இந்தக் கண்ணன் சென்றாலும் சரியே, பொறுமைக்கிடமான நீங்கள் கூறியனுப்பும் கூற்றுக்களை மொழிந்தாலும் சரியே, அந்த மதியற்ற மன்னனும் துரியன் கேளான். கெடுமதி கண்ணுக்குத் தோன்றுமா? உவர்நிலத்தில் நெல் விளைவு உண்டாகுமா? பாம்புக்குப் பால் கொடுத்தாலும் அது விடம் ஒழிய வேறு ஒன்றையும் தராதன்றோ?" என்று பார்த்தன் பகர்ந்து அமர்ந்தான்.

பின்னர் நகுலனைத் தன் எண்ணம் இன்னது என்பதை அறிவிக்குமாறு கண்ணன் கேட்க, அவனும் அர்ச்சுனன் உரைத்தவாறே, "கண்ணா! துரியன் நாடு கொடுக்கமாட்டான். நம்மை நாட்டவர் இகழாவண்ணம் போரிடுவதே தக்கது. தானே அறியாதவன் பிறர் போய் அறிவித்தாலும் உணரமாட்டான்" என்று கூறினான்.

இறுதியாகச் சகாதேவனை நோக்கி "உன் கருத்து யாது?" என்று கேட்க, அவன் பேரறிஞன் ஆதலின், கிருட்டிணனை நோக்கி, "கண்ணா நீ நினைக்கிறபடி தூதனாகச் சென்றால்தான்

என்ன? தருமர் கூறியவற்றை எடுத்து அவனுக்குச் சொன்னால்தான் என்ன? துரியன் நாட்டைக் கொடுத்தால்தான் என்ன? கொடுக்காமல் போனால் தான் என்ன? திரௌபதை விரித்த கூந்தலை முடித்தால்தான் என்ன? விரித்திருந்தால்தான் என்ன? முடிவில் இன்னதுதான் நடக்கும் என்பது எனக்குத் தெரியும்'' என்று கூறி, மேலும், ''கண்ணா, உன் திருவுள்ளத்துக் கருத்து எதுவோ, அதுவே எனக்கும் கருத்தாகும்'' என்று கூறிவிட்டனன்.

இத்துடன் கூறி நிறுத்தினான் அல்லன் சகாதேவன். முகுந்தனை நோக்கி, ''கண்ணா! உனது மாயை இங்கு உள்ளார் எவரும் அறியார். யான் அறிவேன். உனது திருவுள்ளத்துக் கருத்தை நான் நன்கு அறிவேன்'' என்று மொழிந்தனன்.

இவ்வாறு சகாதேவன் கூறக் கண்ணன், ''ஏது! இவன் நம்மைச் சந்தியில் இழுத்து வைப்பான் போல் இருக்கிறதே!'' என்று மனத்துள் கொண்டு, அவனை மட்டும் தனித்ததோர் இடத்திற்கு அழைத்துச் சென்று ''சகாதேவா! பாரதப் போர் நடவா வண்ணம் ஒரு வழி கூறுக'' என்று கேட்டனன்.

இங்ஙனம் கண்ணன் வினவியபோது சகாதேவன் கிருட்டிணனை வணங்கி, ''கண்ணா! நீ பாரதப் போரில் யாவரையும் கொன்று பூ பாரம் தீர்க்கவே எண்ணியுள்ளாய்! ஆகவே, நீ அல்லாமல் பாரதப் போரை அகற்ற வல்லவர் எவர் உளர்? என்றாலும் என் கருத்தைக் கூறுமாறு நீ பணிக்

கின்றாய். ஆதலால் அதையும் கூறி விடுகின்றேன். கேள். பாரதப் போர் நிகழாமல் இருக்க வேண்டுமானால், அர்ச்சுனனை முன்னர் கொல்ல வேண்டும். கன்னனுக்கு முடி சூட்ட வேண்டும். திரௌபதியின் கூந்தலை வெட்டிவிட வேண்டும். உன்னையும் வெளியேற விடாமல் காலில் விலங்கு பூட்டி அடைத்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் பாரதப் போர் வராமல் காக்கலாம்'' என்றான்.

கிருட்டிணன் உடனே சகாதேவனை நோக்கி, ''சகாதேவா! நீ முன்னர் கூறியவை அனைத்தையும் செய்து முடிக்க இயலும். இறுதியில் என்னையும் கட்டி விட வேண்டும் என்று கூறினாயே, அஃது எப்படி முடியும்?'' என்று வினவினான்.

முடியிட்டவனுக்கு அவிழ்க்கவா தெரியாது? உடனே சகாதேவன் ''உன் உண்மை வடிவத்தைக் காட்டக் கட்டிடுவன்'' என்றான். கண்ணன் பதினாயிரம் வடிவு கொண்டனன். அவ் வடிவில் மூலப் பொருள் இஃது என்பதைச் சகாதேவன் தன் அறிவினால் உணர்ந்து தன் அன்பினால் பிணித்து விட்டனன். பரந்தாமன் சகாதேவனுடைய அன்பையும், அறிவையும் உணர்ந்து பாராட்டித் தான் கொண்ட பதினாயிர வடிவங்களை மறைத்து முன் போல் நின்று ''சகாதேவா! நாம் இங்கு உரையாடியதையும், நிகழ்ந்ததையும் பற்றி உன் உடன் பிறந்தவர்கட்கோ, ஏனையோர்கட்கோ ஒன்றும் இயம்பாதே'' என்று கட்டளை இட்டனன்.

சகாதேவன் இது தான் சமயம் என்று உணர்ந்து "முகுந்தா! நீ கூறியவாறே நான் நடந்து கொள்கிறேன். ஆனால், கொடிய பாரதப் போரில் நாங்கள் ஈடுபடும்போது உன் கடைக் கண்ணால் எங்களைக் காத்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். கண்ணனும் அவ்வாறே செய்வதாக வாக்குத் தந்தனன்.

பின்பு இருவரும், யாவரும் கூடியிருந்த சபையை அணுகினர். அணுகியதும் கண்ணன் அங்குள்ளோரை நோக்கி, "சகாதேவனும் சமாதானமே தக்கது என்று மொழிந்திட்டான்" என்று கூறினான்.

இவ்வாறு கண்ணன் கூறிய வார்த்தைகளைக் கேட்ட திரௌபதி, கலங்கி வாய்விட்டுக் கதறி "கோவிந்தா! என் கற்றையான கூந்தலைப் பற்றித் துச்சாதனன் என்னை அவமானம் செய்தபோது, இந்தப் பாண்டவர்கள் பார்த்துக் கொண்டுதானே இருந்தார்கள்! அன்று என் மானத்தைக் காத்தவன் நீ தானே! இன்னமும் துரியன்பால் தூது அனுப்பி ஐந்து ஊர்களைப் பெற்று வாழ்ந்து கொண்டு இருந்தால், அன்று விரித்த கூந்தலை யான் என்று முடிப்பது?" என்று கூறிக் கண்ணன் திருவடிகளில் வீழ்ந்து அழுதனள்.

இந்தத் துன்பக் காட்சியைக் கண்ட அச் சபையில் இருந்த சாத்தகி என்பவரும் மனம் இளகிச் சிறிது கோபம் கொண்டு "வீமன் கையில் கதை என்னும் ஆயுதம் இருந்து யாது பயன்? அர்ச்சுனன் கையில் காண்டீபம் என்னும் வில் இருந்து யாது பயன்?

வண்டு மொய்க்கும் அளவுக்கு மலர் சூடி இருக்க வேண்டிய திரௌபதியின் கூந்தலில் மாசு படிந்துளது. இன்னமும் பகைவர்பால் கெஞ்சி நாட்டைப் பெற்று வாழ எண்ணுகின்றீர்களே'' என்று கூறினர்.

இப்படிச் சாத்தகி கூறியதையும் பாஞ்சாலி கூறி அழுது அரற்றியதையும் கண்ட கண்ணன் "மாதே, வருந்தாதே! பாண்டவர்கள் பொருட்டுக் கௌரவர்பால் நானே தூதுவனுகச் சென்று மீண்டதன் பின் உன் கூந்தலை நானே முடிக்க வழி செய்கின்றேன்'' என்று கூறி அவளைச் சாந்தப் படுத்தினன்.

மாயோன் பொன்மயமான தேர்மீது அமர்ந்து முரசு ஒலிக்க, சங்கம் முழங்க, தாரைகள் ஒலிக்க வெண் குடை நிழலில் தங்கி இரு புறமும் சாமரைகள் இரட்டப் புறப்பட்டனன். புறப்பட்டவன் இடையில் மலைகளையும், பாலைவனங்களையும், காட்டாறுகளையும், நன்செய் புன்செய் நிலங்களையும் கண்டு களித்து இரண்டு நாட்களில் கடந்து, மாட மாளிகைகள் கூட கோபுரங்கள் நீண்ட மதில்கள் சூழ்ந்த அத்தினபுரத்தை அடைந்தனன்.

அத்தினபுரம் நீர்வளம் நிலவளம் கொண்டது. குளங்கள் யாவும் செந்தாமரை மலர்கள் மலர்ந்து, திருமாலாகிய கண்ணனை ஆலத்தி கொண்டு வர வேற்பனபோல வரவேற்றன. இந்நிலையில் திருமகள் கேள்வனும் (கணவனும்) கண்ணன் ஒரு

சோலையிடத்து வந்து தங்கினன். இவனது வருகையைத் தூதுவர் துரியனுக்கு அறிவித்தனர். இங்ஙனம் அறிவிக்கக் கேட்ட துரியன், கண்ணனை வரவேற்க நாட்டினை அலங்கரிக்குமாறு ஆணையிட்டுத் தானும் புறப்பட்டனன். சகுனி துரியனை அவ்வாறு செய்ய ஒட்டாமல் தடுத்தனன்.

மாயவனது வருகையை அறிந்த வீடுமர், துரோணர், அசுவத்தாமர், விதுரர், கிருபர் முதலியோர் கண்ணனை எதிர் கொள்ளச் சென்றனர். தன்னை வரவேற்க வந்தவர்களோடு சிறிது நேரம் அளவளாவிப் பின் துளபம் அணிந்த பரந்தாமன் விதுரர் மாளிகைக்குச் சென்றனன். நெடுமாலாம் மாயோன் வேறு எவர் வீட்டிற்கும் செல்லாது தம் இல்லத்திற்கு வந்துற்றமையின் பொருட்டுப் பெரு மகிழ்வு கொண்டனர் விதுரர். அம்மகிழ்வு காரணமாகக் கண்ணனை நோக்கி, "கண்ணா, எனது சிறு குடிசையினை என்னென்று கருதினாய்? நீ முன்னே உறங்கிய திருப்பாற்கடல் என்று நினைத்தனையோ? அல்லது உனது படுக்கையாகிய பாம்பணை என்று நினைத்தனையோ? அன்றி ஊழிக் காலத்தில் உறக்கங் கொள்ளும் ஆல இலை என்று எண்ணினையோ? நால்வகை வேதங்கட்கு உறைவிடம் என்று உணர்ந்தனையோ? நீ என் குடிசையில் எழுந்தருளியதற்கு என் இல்லம் பெரிய தவம் செய்திருக்க வேண்டும்" என்று உபசார மொழிகள் கூறினன். விருந்துணவையும் கண்ணனுக்குப் படைத்தனன். அன்று இரவு மாயோன் தான் வந்த களைப்பு நீங்க நன்கு உறங்கி, மறுநாள் துரியன் அரச சபைக்குப் புறப்பட்டனன்.

முகில்வண்ணன் (மேக நிறத்தினனான கண்ணன்) துரியன் சபையினை அணுகிய போது, துரியனைத் தவிர்த்து மற்றவர்கள் வந்து வணங்கி வரவேற்றனர். தனக்கென அமைந்த ஆசனத்தில் கண்ணன் அமர்ந்தனன். உடனே அரவக் கொடியோன், அமலநாதிபிரானை (கிருட்டிணனை) நோக்கி, "எம்மூர் புகுந்தும், நேரே எம் மாளிகை புகாது விதுரர் இல்லம் சென்றது முறையோ?" என்று கேட்டனன். மாயையில் வல்ல மாயோன் ஆகிய கண்ணன் "மன்னா! எனக்கு உன் வீடு என்றும், பிறர் வீடு என்றும் வேறுபாடு கிடையாது. என்றாலும், விதுரர் தாம் அன்புடன் தம் இல்லம் வருமாறு வேண்டினார். பிறர் எவரும் அவ்வாறு என்னை அழைத்திலர். ஆகவே, அவர் மாளிகைக்குச் சென்றனன். மேலும், நான் உன் மாளிகையில் வந்து தங்காமைக்கும் ஒரு காரணம் இருக்கிறது. அதாவது உனது பங்காளிகளால் ஏவப்பட்ட தூதனாகிய யான், உன் இல்லத்தில் தங்கி, உன் உணவினை உண்டு, உன் கருத்துக்கு மாறாக, நான் பேச நேர்ந்தால், அஃது ஒழுங்காகாதே. மேலும், அமைச்சராக இருந்து அரசை அழித்தாலும், பெரியோர் வார்த்தைகளைத் தட்டி நடந்தாலும், பிறர் செய்த நன்றியை மறந்தாலும், ஒருவர் இல்லத்தில் உண்டு பின் அவரோடு போர் தொடுக்க எண்ணினாலும் அப்படிப்பட்டவர்கள் சந்திர சூரியர்கள் உள்ள வரையில் நரகத்தில் ஆழ்வர்" என்று மொழிந்தனன்.

இவ்வாறு கண்ணன் கூறக் கேட்ட துரியன் வேறு ஒன்றும் தொடர்ந்து வினவாமல் வந்த கார

ணத்தைக் கூறுமாறு வினவினன். கண்ணனும், "சூரிய! உனது துணைவர்கள் சூதினுல் அரசை இழந்தனர். பின் நீ சொன்ன சொற்படி, காட்டிடை கடக்க வேண்டிய நாட்களையும் கழித்து மீண்டும் வந்து சேர்ந்தனர். ஆகவே, அவர்கள் உரிமையினை உன்னைக் கேட்டுப் பெற யான் பாண்டவர் பொருட்டுத் தூதுவனுக வந்துள்ளேன். நீ உன் துணைவரை அழைத்து அவர்கட்குரிய நாடுகளைத் தந்து அவர்களோடு பொருந்தி வாழ்க. இவ்வாறு செய்தால் உன்னை வாய்மையுடையவன் என்று அரசர் புகழ்வர். இவ்வாறு செய்திலை எனில், உனக்கு அறமும் ஆண்மையும் புகழும் ஏற்படா" என்று இயம்பினன்.

இங்ஙனம் புகலக் கேட்ட இராச ராசன் சீற்றம் கொண்டு, "பாண்டவர்கள் இன்னமும் காட்டில் திரிவதே முறை. நீ வெறுத்தாலும் சரி, இங்குள்ள மன்னர் திகைப்புற்றாலும் சரி, பலப்பல எண்ணினுலும் சரி, பின்னுல் என்னைப் பற்றி எள்ளி நகையாடினுலும் சரி, நான் கூறிய வார்த்தையினைத் தவறினேன் என்று தேவர்கள் புகன்றாலும் சரி, என்னோடு எதிர்த்து அப் பஞ்சவர் போர் தொடுத்தாலும் சரி, ஈ உட்காரும் இடம் கூட அவர்களுக்குக் கொடுக்க மாட்டேன்" என்று சிறிதும் இரக்கம் இன்றி இயம்பினன்.

கண்ணன் இந்தவாருன சினம் மிக்க வார்த்தைகளைக் கேட்டு, "மன்னு, நாடு முழுமையினையும் கொடுக்க மனம் இல்லையாயின், பாதி நாட்டினை

யேனும் தருதி'' என்றனன். அதனையும் தர மறுத்தனன் துரியன். கண்ணன் மீண்டும் ''ஐவர்களும் தனித்தனி வாழ ஐந்து ஊர்களையேனும் வழங்குக'' என்று இரந்தனன். இவ்வளவு கெஞ்சிக் கேட்டும் ஒரு வீடுகூட அளிக்க மறுத்தனன் துரியன்.

மாயன் மேலும் துரியனை நோக்கி, ''துரிய! வீடுமர் தம் தந்தையாரின் பொருட்டு, தம் வாழ்வையும், அரசினையும் துறந்து உன்னுடனே வாழ்ந்து வருகின்றார். அதனை எண்ணியேனும் உன் துணைவர்கட்கு ஐந்து ஊர்களைக் கூட நீ கொடுக்க மறுத்தால், உனது அரசியலை என்னென்று உரைப்பது! ஒரே குலத்தில் இரண்டு மன்னர் உடன் பிறந்து அரச உரிமை பெற்றால், இருவரும் ஒற்றுமையுடன் வாழ்வதுதானே முறையாகும்? அப்படி இருக்க, குரு குலத்தவர்களாகிய நீங்கள் இருவரும் மனவேறுபாடு கொண்டு வாழ்வது பெருங்குறையாகும்'' என்று எடுத்து மொழிந்தனன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட துரியன் ''கண்ணா! நாட்டை எளிதில் பெறலாம் என்று எண்ணிவந்தனையோ? நாடு வீரர்களுக்கு உரியதன்றி, வேறு எவர்க்கும் உரியதன்று'' என்று கூற, உடனே கண்ணன் இதுதான் சமயம் என்று, ''மன்னர் மன்னா, இவ்வாறு ஆண்மையோடு பாண்டவருடன் போரிட எண்ணமிருக்குமானால் கைபோட்டுத் தருக. அதாவது சத்தியம் செய்து கூறுக'' என்று கேட்டனன்.

இவ்வாறு கூறக் கேட்ட துரியனுக்கு அடக்க ஒண்ணாத சினம் பொங்கியது. "காட்டில் காளை மாடுகளையும் கன்று காலிகளையும் மேய்க்கும் இடையனாகிய நீயா, என் குருகுலத்து வாய்மை அறியாது இந்த வார்த்தையினை இச் சபையில் மொழிந்தாய்! யானைகள் எதிர்த்தால் சிங்கங்கள் அஞ்சுமோ? அதுபோலப் பாண்டவர் என்னைப் பகைத்துப் போரிட்டால் அதற்கு அஞ்சி யான் பின் அடைவனோ? நாடு ஒன்றா? இரண்டா? அப்படி இருக்க, யான் கை அறைந்து கொடுக்கவேண்டுமா? பஞ்சபாண்டவர்கள் தம்மை வீரர் என்று கூறிக் கொள்ளத் தகுதியுடையரோ? அவர்களின் இல்லாள் இராச சபையில் துகில் உரியப்பட்டபோது பார்த்துக் கொண்டிருந்தவர்கள் தாமோ வீரர்கள்?" என்று இழிவாக மொழிந்தனன்.

இங்ஙனம் துரியன் மொழிந்த மொழியின் கருத்தைக் கண்ணன் உணர்ந்து, பாம்புக் கொடியோன் போரினுக்கு ஆயத்தமாக இருக்கின்றனன் என்று முடிவு செய்து கொண்டு, இராச சபையினை விட்டு விதுரர் வீடுவந்து சேர்ந்தனன். அதன்பின் கண்ணன் குந்திதேவி இருந்த இடத்தை அடைந்தனன். அவளும் தன் மைந்தர்களை எதிரே கண்டவள் போல் மனமகிழ்ந்து நல்ல முறையில் வரவேற்றாள். கண்ணன் பாண்டவர் பொருட்டுத் துரியனிடம் தூது போந்தும், நாடுபெற வழி இன்றிப் போர் தொடுத்துப் பெறவே வழி ஏற்பட்டது என்பதை எடுத்துக் கூறிக் குந்தியை நோக்கி, "குந்திதேவியே, நீ நேரே கன்னனிடம் போய், 'நான்தான் உன்னைப் பெற்ற

தாய்' என்பதை எடுத்துச் சொல்லுக" என்று கூறி, குந்தி எப்படிக் கன்னனுக்குத் தாயாவாள் என்ற வரலாறுகளையும் சொல்லி அனுப்பினான். அத்துடன் இன்றி, அவன் வளர்த்து வரும் நாகாத்திரத்தினை (பாம்பாகிய அம்பை) ஒரு முறைக்குமேல் மறு முறை அர்ச்சுனன் மீது விடாதிருக்குமாறு வற்புறுத்திக் கூறவும் சொல்லி அனுப்பினான்.

இதற்கிடையில் துரியனும் அவனைச் சார்ந்த சதிகாரரும் "கண்ணன் தனித்துள்ளான். இவனது சகாயம் பாண்டவர்க்கு மிகுதியும் உண்டு. ஆகவே, இவனை என்ன செய்வது?" என்று சிந்தனை செய்கையில், துரியன் தந்தையார் திருதராட்டிரர், அவனைக் கொல்வதே முடிந்த முடிபு" என்று மொழிந்தனர். நீதி முறை அறிந்த விகர்னன், வயதில் மூத்தவர்களையும், இளையவர்களையும், வேதம் உணர்ந்த முனிவர்களையும், மாதர்களையும், தூதர்களையும் போற்றிப் புகழ்கிறவர்களையும், அரசர்கள் கொல்லுதல்கூடாது. கொல்லுதல் பெரும் பாவம் ஆகும். இதைவிடப் பெரும் பாவம் எதுவும் இல்லை. அப்படிக் கொன்றவர்கள் நரகமே புகுவர்" என்று கூறினான்.

இவ்வாறு விகர்னன் கூறக்கேட்ட சதிகாரர்கள், இறுதியில் "தூதனைக் கொல்லுவது முறை அன்று தான். ஆனால், சிறைப்படுத்தல் ஒழுங்கு" என்று முடிவு செய்தனர். அதன்பொருட்டு நில அறை ஒன்று அமைத்து அதன் மீது விரிப்பு ஒன்றை விரித்துக் கீழே நில அறை உண்டென்று அறியாவாறு செய்து, மேலே தவிசு இட்டுக் கண்ணனை அதன் மீது அமரச் செய்ய ஏற்பாடு செய்தனர். இவ்வாறு

செய்ததன் கருத்து, அதன் மீது கண்ணன் அமர்ந்ததும் அத் தவிசு நில அறையில் புகும். அது போது அங்கு முன்பே இருக்க வைத்த மல்லரைக் கொண்டு மாயனைப் பிணித்து விலங்கிட்டுச் சிறை செய்யலாம், என்பது.

மீண்டும் கண்ணன் துரியன் சபையினை அடைந்தனன். கண்ணனை அப்பொய்த் தவசில் அமருமாறு துரியன் கூறினன். எல்லாம் அறிந்த கண்ணன் அத் தவிசினைச் சார்ந்ததும், அது முறிந்தது. உடனே கண்ணன் பேருருவம் கொண்டு நின்றான். தன் காலாலும் கையாலும் மல்லர்களைச் சாடினன். கண்ணனின் தோற்றத்தையும் சீற்றத்தையும் அங்குள்ளார் அனைவரும் கண்டனர்.

"மாதவனே எங்களைக் கோபிக்க வேண்டா. எங்களை ஆட்கொள்ளும் தேவனே கோபிக்க வேண்டா. எங்கள் உள்ளத்தில் குடிகொண்டவனே கோபிக்க வேண்டா" என்று பலவாறு கண்ணனை அவர்கள் போற்றி வேண்டினர்.

அதன்பின், கண்ணன் தன் சீற்றம் தணிந்து இயற்கை உருக்கொண்டனன். துரியனை நோக்கி "துரியா உன் மதி கேட்டினால் என்னையா கொல்ல முயன்றனை? உன்னையும் உன்னைச் சார்ந்தவரையும் கொல்ல வழி தேடுகிறேன் பார். அதனை நீ விரைவில் உணர்வாய்" என்று கூறி இந்திரனை அழைத்துக் கன்னனிடம் சென்று அவனுடன் தோன்றிய கவச குண்டலங்களை, (மார்பு கவசம், காதணி) வேண்டிப்பெறுமாறு பணித்துப் பாண்டவர் வாழும் இடத்தை அடைந்தான்.

அங்ஙனம் அடைந்த கண்ணன் தருமரிடம், தான் தூதனாகச் சென்று கூறியதையும், துரியன் மறுத்துப் போரிட ஆயத்தமாய் இருப்பதையும், விதுரன் வில்லை முறித்ததையும், துரியன் தன் உயிரைப் போக்க முயன்றதையும், இந்திரன் கன்னனிடமிருந்து கவச குண்டலங்களைப் பெற்றதையும், குந்தி கன்னனிடம் வரங்கள் பெற்று வந்ததையும் மொழிந்தனன். எல்லார்க்கும் முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ!

# 8. நளன்

வீமராசன் என்பவன் விதர்ப்ப தேசத்து மன்னன். இந்த விதர்ப்ப தேச மன்னனும் வீமராசனுக்குச் சிறந்த அழகு மிக்க பெண் ஒருத்தி பிறந்தனள். அவளே தமயந்தி என்னும் தையலாவாள். அவளது அழகு காரணமாகத் தேவர்களான இந்திரன், இயமன், அக்கினி, வருணன் ஆகிய நால்வரும் அவளை மணந்துகொள்ள பெரு விருப்பம் கொண்டிருந்தனர். என்றாலும், தமயந்தி நிடத தேசத்து மன்னனும் நளனிடத்தில் தன் உள்ளத்தைப் பதியவைத்து அவனையே மணப்பது என்ற உறுதி கொண்டிருந்தாள். தமயந்தி பேர் அழகு வாய்ந்தவள் என்று முன்னர் அறிந்தோம். அப்படியாயின் விண்ணவர்களே அன்றி, அவளை மண்ணவர்களும் மணக்க விரும்பினர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

ஆகவே, அவளைக் கடிமணம் புரியப் போட்டி மிகுந்துதான் இருந்தது. இதனை அறிந்த வீமராசன் இந்த வம்பு தனக்கு ஏன் என்று எண்ணி, அரச முறைப்படி சுயம்வரம் என்ற ஒன்றை ஏற்படுத்தி அதற்கு எல்லா மன்னரையும் மற்றுளாரையும் மண ஓலை போக்கி வரவழைத்துக் கூட்டி, அப்போது யார்க்குத் தன் மகள் மணமாலை சூட்டுகின்றாளோ, அவனுக்கே அவளை மணம் முடித்து வைப்பது என்ற முடிவுக்கு வந்தனன். அதற்கு ஆவன செய்து

சுயம்வர நாளைக் குறிப்பிட்டு அவரவர்கட்கு மண ஓலையினையும் விடுத்தனன்.

வீமராசனால் விடுக்கப்பட்ட தூதுவர் நிடத தேசத்து மன்னனும் நளமகாராசனிடம் தமயந்தியின் சுயம்வரங் குறித்த மண ஓலையுடன் வந்து சேர்ந்தனர். தமயந்தியின் சுயம்வர ஓலையினை நீட்டினர். அதனை யேற்ற நளன், உள்ளம் மகிழ்ந்து படித்து உடனே விதர்ப்ப தேசம் புறப்பட ஆயத்த மானான். நன்கு அலங்கரிக்கப்பட்ட தேரின்மீது அமர்ந்து விதர்ப்பதேசம் நோக்கிப் புறப்பட்டான்.

நளன் தமயந்தியின் சுயம் வரத்திற்குப் புறப்பட்டது போலவே, முன்பு குறிப்பிடப்பட்ட வானவர்கள் நால்வரும் புறப்பட்டனர். இடை வழியில் அத்தேவர்கள் நளனைக் கண்டனர். நளனது அழகினை உற்று நோக்கிய இந்திரன், 'நான் உடம்பெல்லாம் ஆயிரம் கண்களைப் பெற்றதன் பயனை இன்றுதான் பெற்றேன். இந்த ஆயிரங் கண்களாலும் நளனது அழகைக் கண்டு இன்புற்றேன்' என்றனன்.

வருணனும் நளனது அழகை வியந்து கூறத் தொடங்கி 'ஆ! இவ்வளவு எழில் நலம் படைத்த இந் நளனைத் தவிர்த்து, அம் மடந்தையாம் தமயந்தி எப்படி மற்றொருவனுக்கு மணமாலை சூட்டுவாள்? அது சந்தேகம்தான்!' என்று முடிவு கட்டினன்.

அக்கினியும் தன் கருத்தினை அறையலுற்றவனாய் 'இவ்வளவு அழகுடைய காளையாம் நளனுக்கு

அக்காரிகை மணமாலை சூட்டிலள் எனில், அவள் அழகு பெற்றிருந்தும் பயனில்லை' என்று பகிரங்கமாகப் பகர்ந்து விட்டனன். இயமன், "நான் சுயம்வரத்திற்குப் போவதில் பயனே இல்லை. நளனுக்கே அந்நங்கை மாலை சூட்டுவாள். ஆகவே, நான் திரும்பிப் போவதே அறிவுடைமை" என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறி விட்டனன். இவ்வாறு இந்திரன், வருணன், அக்கினி, இயமன், ஆகிய நால்வரும் நளனது அழகை வியந்து போற்றினர். தமயந்தியின் உளத்தையும் அறிந்து கூறினர்.

இங்ஙனம் தம் தம் உள்ளக் கிடக்கையினை ஒளியாது உரைத்த நான்கு தேவர்களும் 'ஆசை வெட்கம் அறியாது' என்பதற்கு இணங்க, நளனை அணுகினர். இந்திரன், நளனை நோக்கி, 'நளமகாராசனே! உன் வரவு நல்வரவாகுக. நாங்கள் நல்ல வேளையில் புறப்பட்டதன் காரணத்தால்தான் உன்னை வழியில் கண்டனம். இவன் அக்கினிக் கடவுள். இவன் எமதருமன். இவன் கடற் கடவுள். யானே தேவர்கள் தலைவனான தேவேந்திரன். யாங்கள் நால்வரும் உன்னை ஒன்று வேண்டப் போகிறோம். அதனைப் பின்னர்க் கூறுகிறோம்" என்று கூறினன்.

நளன் அவர்களைத் தனித்தனியே வணங்கினான். "இவர்களோ தேவர்கள்; இவர்களுக்கு நம்மால் ஆகக் கூடியது என்ன இருக்கும்? மேலும், குறிப்பறிந்து ஈதலே சிறந்த கொடை. கேட்ட பின் கொடுத்தல் கேட்டு இல்லை என்று சொல்வதற்குச் சமமாகும். இத் தேவர்களின் உள்ளத்தில் இன்னது கேட்க

இருக்கிறது என்பதை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லையே!

"தம் முகப் பொலிவையும் கெடுத்துக் கொண்டு. நாணத்தினை யுடையவராய் பொருள் இல்லை என்று கூறும் மயக்கத்தினைத் தெளிவு படுத்தற்கு அன்றோ பொருளினை உதவும்போது நீருடன் உதவும் மரபு ஏற்பட்டுள்ளது? மேலும், நம்மை அடைந்து ஒன்றைக் கேட்கும் இரவலர், உறவு முறையினரை விட இனியவர் ஆவர். இப் பிறவியில் அவ்விரவலர்கட்கு அருளுடன் ஈந்து இன்புறுவோமானால், அவர்கள் மறு பிறப்பில் அவற்றை வழங்கி விடுவர்.

"மேலும், பெருஞ் செல்வத்தை இறைவர் கொடுத்திருப்பது, உலகில் புண்ணியமாகிய பேற்றைப் பெறுவதற்கே ஆகும். ஆகவே, வறுமையால் வாடி வந்து கெஞ்சிக் கேட்பவர்கட்கு அன்புடன் உதவினால் ஒன்று பலவாகப் பெருகும்" என்றெல்லாம் எண்ணினான்.

இவ்வாறெல்லாம் எண்ணி "தேவர்காள், என் தொல்குலம் செய்த தவம் காரணமாக உம்மைக் கண்டேன். நீங்கள் என்னிடம் விரும்புவது யாதோ அறியேன். அதனைக் கூறினால் மாறாமல் செய்கின்றனன்" என்று உறுதி கூறினான்.

இந்திரன் நளனை நோக்கி, "ஐய, நளனே! நீ எங்கள் பொருட்டுத் தமயந்தியிடம் சென்று, எங்கள் நால்வருள் ஒருவருக்கு மணமாலை சூட்டுமாறு அவளிடம் சொல்லவேண்டும்" என்றனன். இவ்வாறு

கூறியதும் நளனுக்குத் தன் எண்ணத்தில் இடி விழுந்ததுபோல் இருந்தது. என்றாலும், தான் எது கூறினாலும் செய்து முடிப்பதாக வாக்குத் தந்தமையின், அதனை மறுத்து விடுவதற்கு அஞ்சி அவ்வாறே செய்வதாக ஒவ்வினான்.

நளனுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. அதாவது ஓர் ஆண் மகன் மாதர்கள் வாழும் அந்தப்புரம் சென்று எப்படி மீள்வது என்பதே அவ்வையம் ஆகும். ஆகவே, நளன் இந்திரனை நோக்கி, 'யான் எப்படி மீள்வது?' என்று வினவ, உடனே இந்திரன் 'நீ அந்தப்புரம் சென்று மீளும் வரை ஒருவர் கண்ணுக்கும் தோன்ற மாட்டாய். ஆனால், நீ மட்டும் ஆண்டுளார் யாவரையும் கண்ணுறுவாய். இத்தகைய மந்திர சக்தியினை உனக்கு நல்கியுள்ளேன்'' நீ அச்சமின்றிச் செல்லலாம்' என்று கூறினான்.

அம் மந்திர வித்தையுடன் நளன் தமயந்தி வாழ் இடம் நோக்கிப் புறப்பட்டனன். இவ்வாறு புறப்பட்டவன் தமயந்தியைச் சோலையிடத்தும் செய் குன்றுகளின் மீதும் காண இயலாதவனாகி, அவள் உறைவிடமாகிய கன்னி மாடத்தை அடைந்தனன். அங்கு அரம்பையர் சூழ, இந்திராணி அமர்ந்திருப்பது போலத் தோழியர் பலர் சூழ இடையே தமயந்தி வீற்றிருத்தலை நளன் கண்டனன்.

தமயந்தியின் உள்ளம் நளனையே நாடி இருந்தது என்பது உண்மையாதலால், தமயந்தியின் துயரை நீக்கத் தோழியர் அடிக்கடி தமயந்தியை நோக்கி, 'அம்மணி வருந்தற்க. இதோ நள மகாராசர் வந்து விட்டனர்' என்று தினமும் கூறி வந்

தனர். இவ்வாறு கூறுவதைத் தமயந்தி வளர்த்து வந்த கிளிகள் கேட்டு, அவையும் அவ்வாறே கூறத் தொடங்கின. இது நளனுக்குத் தெரியாதன்றே! ஆகவே, நளன் தன் உருத் தோற்றாத நிலையில் தமயந்தி இருந்த கன்னி மாடத்தில் வந்து தமயந்தியைக் கண்ணுற்று நின்ற தருணம், கிளிகள் தாம் தினமும் பயின்ற பழக்கத்தால் 'நளன் வந்தனன்; நளன் வந்தனன்' என்று பேசத் தொடங்கியதைக் கேட்ட நளன், உடல் துணுக்குற்று இக் கிளிகள் நம்மைக் கண்டு விட்டனவோ? என்று அஞ்சினான்.

தேவர்கள் நளனைத் தமயந்திபால் தூதனாக அனுப்பியது போதாது என்று, தனித் தனியே மாதர் நால்வரைத் தமயந்திபால் தூதுவராக விடுத்தனர். அவர்களும் தமயந்தியைக் கண்டு, அவள் அழகையுண்டு "இவள் அழகினைக் கண்டால் இந்திராணி முதலிய தேவ மாதர்களும் வெட்கித் தலை குனிய வேண்டியதுதான்! தமயந்தியின் அழகுக்கு முன் தேவ மாதர் அழகு, சூரியன் முன் சந்திரன் போன்றது" என்று வியந்து பேசினர். பின்னர்த் தாம் வந்த காரியத்தினை இனிது முடிக்க வேண்டுமென்று உளம் கொண்டு, முதலில் இந்திரனால் ஏவப்பட்ட இந்திரன் தூதி தமயந்தியை நோக்கி, 'தமயந்தியே, கற்பக நிழலில் வீற்றிருந்து அரசு செய்யும் தேவர்களின் தலைவனான இந்திரன் தூதி யான். இந்திரன் பெருமையைக் குறித்து இயம்ப வேண்டா. அவன் இந்திரலோகம் முழுமையும் தன்னதாகக் கொண்டு செங்கோல் ஓச்சுபவன். பகைவரை வெல்லும் பலம் பொருந்தியவன். தேவர்கள்,

தன் இணையடி போற்றும் நிலையினைப் பெற்றவன். சிந்தாமணி, காமதேனு, கற்பக விருட்சம் ஆகியவை தனக்கே உரியன என்னும் தனி உரிமை பெற்றவன். கடலைக் கடைந்து திருமகளைப் பெற்று அவளைத் திருமாலுக்கு ஈந்த பெருமை நிறைந்தவன். உலகில் நூறு யாகங்களைச் செய்து இந்த இன்ப நிலையினைத் பெற்றவன். மேலும் கேள்; உலகில் சிறப்புடன் வாழும் மக்கள் தொகுதியில் சிறந்தவர் இயக்கர்கள். அவ் இயக்கர்களைக் காட்டிலும் தேவர்கள் சிறந்தவர்கள். அத்தகைய தேவர்களுக்குத் தலைவனை இந்திரனை நீ மணந்தால் அவன் உன் ஏவல்படி நடப்பான். அஃது உனக்குப் பெருஞ் சிறப்பு அன்றோ?'' என்றனள். "தேவர்களேயானாலும் நான் நளனையன்றி வேறெவரையும் மணவேன். ஆகவே, நீ வந்த வழி நோக்கி இந்திரனை அடைக'' என்று தமயந்தி கூறினாள். இவ்வாறு தமயந்தி உரைப்பக் கேட்ட உருமறைந்து நின்ற நளன், தமயந்தி தன்னிடம் வைத்துள்ள உண்மை அன்பை, எண்ணி எண்ணி உள்ளம் பூரித்தான். இந்திரன் விடுத்த தூதிக்குத் தமயந்தி விடுத்த விடைகளைக் கேட்டதும், இயமன் விடுத்த தூதியும், அக்கினி அனுப்பிய தூதியும் வருணன் போக்கிய தூதியும் தமயந்தியிடம் ஒன்றும் கூறாது திரும்பி விட்டனர்.

இனி, நளன் தான் வந்த காரியத்தினை இனிது முடிக்கும் பொருட்டு, இனி, தான் மறைந்த வடிவில் இருந்து பயன் இல்லை என்று உணர்ந்து, அக் கன்னிமார்களின் கட்புலன் முன்னால் மெய் வடிவுடன் தோற்றம் அளித்தனன்.

தமயந்தியின் அருகு இருந்த தோழியர் "ஐய, காவலையுடைய நகரைக் கடந்து இக்கன்னி மாடம் புகுந்த நீ யாவன்? உன் பெயர் யாது?" என்று வினவினர். உடனே நளன், "நங்கைமீர்! உமது தலைவி தமயந்தியின் சுயம்வரத்தைப் பற்றிக் கேள்வியுற்ற தேவர்களாம் இந்திரன், இயமன், அக்கினி, வருணன் ஆகிய நால்வரும் என்னைத் தமயந்தியிடம் தூதனாக அனுப்பினர். ஆகவே, யான் தேவர்கள் தூதன். அந் நான்கு தேவர்களும் உன் தலைவியினை மணாட்டியாகப் பெற முயன்று வருகின்றனர். அவர்களுள் ஒருவருக்கு அவள் மண மாலை சூட்ட வேண்டும். இதனைக் கூறவே அவர்களால் ஏவப்பட்டு இங்கு வந்துற்றனன்" என்றனன்.

இவ்வாறு கூறக் கேட்ட தமயந்தியின் தோழியர், "எங்கள் தலைவியான வீமராசன் திருமகள், நிடத நாட்டு மன்னனையே தன் உயிரெனக் கருதியுள்ளாள். அவ்வாறு இருக்க, இப்போது இவ்வாறு கூறி அவளது உயிர் துடிக்குமாறு செய்து விட்டாய். எங்கள் தலைவி தமயந்தியின் உள்ளக் கிடக்கையினைக் கூறுகின்றோம், கேள்; எங்கள் தலைவி தமயந்தி, உலகை ஒரு குடைக் கீழ் ஆளும் புகழ் பெற்ற நிடத தேசத்து மன்னனும் நளனைத் தவிர்த்து வேறு யாரையும் மணம் புரிந்து கொள்ளமாட்டாள். வேறு ஒருவருடைய பெயரைக் கூறினும் உளம் பொறுக்கமாட்டாள். நளனை மணக்க வாய்ப்பு இல்லையாயின் தீயில் மூழ்கி உயிர் விடுவாள்" என்றனர்.

நளன் எப்படியும் தன் கடமையினை உளமாரவும் ஒழுங்காகவும் செய்து முடிக்க வேண்டும் என்ற

உள்ளத்தினனாய், சேடியர்களை நோக்கி "தோழியர் களே! உமது தலைவி நளனைத்தான் மணப்பாளோ?, மற்றவரை மணக்க இசையாளோ? நளனை மணக்கும் பேறு பெறாளாயின், தீயில் வீழ்ந்து உயிர் விடுவாள் என்று கூறினீர்? அப்படி உம் தலைவி அக்கினியில் மூழ்கினால் அக்கினியோடு சேர்ந்த அபவாதம் நேரிடாதோ? அல்லது நீருள் மூழ்கி உயிர் விட்டால் வருணனோடு கலந்ததாக வார்த்தை எழாதோ? மேலும் கூறுகின்றேன் கேளுங்கள்; திருமணத்தினை எவர் முடித்துக் கொண்டாலும், அக்கினியைச் சான்றாக வைத்து அன்றோ முடித்துக் கொள்ள வேண்டும்?" என்று கூறினன். நளன் மொழிகள் தமயந்தியின் இரு செவிகளில் இரும்பைக் காய்ச்சி ஊற்றியது போல இருந்தன.

தோழியர் நளனை நோக்கி, "நீ என்ன கூறினும் தமயந்தி நளனைத்தான் மணப்பள்" என்று முடிந்த முடிபாகக் கூறி விட்டனர்.

இம் முடிபைக் கேட்ட நளன் இதற்கு மேல் நான் ஒன்றும் கூறுதல் கூடாது என்றுணர்ந்து தன் கடமையினை இனிது முடித்து விட்டதாக எண்ணி, மீண்டும், தேவர்களை அடைந்து தமயந்தியைக் கண்டதையும், அவளுடைய தோழியர் விடுத்த மறு மாற்றங்களையும், தமயந்தி கொண்டுள்ள உறுதியினையும் கூறினன். தேவர்களும் நளனது கடமை உணர்ச்சியையும் தூய உள்ளத்தினையும் பாராட்டிச் சென்றனர்.

# 9. அன்னம்

இதுவரையில் தெய்வங்கள், முனிவர்கள், புலவர், அரசர், விலங்கு தூதுவராகச் சென்ற வரலாறுகளைக் கண்டோம். பறவையும் தூது சென்றதை இப்பகுதியில் காண்போமாக. அப் பறவை எது? அதுவே அன்னம். இப்பறவை எங்குத் தூதாகச் சென்றது? யாரிடம் தூது சென்றது? ஏன் சென்றது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை கண்டால் அன்னம் தூது சென்ற முறையினை நன்கு உணர்ந்து கொள்ளலாம். இந்த அன்னத் தூது நளனது சரித்திரத்தில் இருக்கின்றது.

நளன் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டு ஒரு சோலையை அணுகினான். சோலையின் காட்சியினைக் கண்டு இன்புற்றான். இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்தான். இந்நிலையில் தாமரைத் தடாகத்தில், தாமரை மலரில், பொலிவுடன் வீற்றிருந்த ஓர் அன்னத்தை நளன் கண்டான். தாமரை அன்னத்திற்கு உரிய இடம். இது வீற்றிருக்கும் அழகு எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்துவிடும். திருஞான சம்பந்தர் அன்னம் தாமரையில் வீற்றிருக்கும் சிறப்பைக் கண்டு, 'அடர்ந்த இதழ்களையுடைய தாமரைப் பூவாகிய பீடத்தில், தாமரையிலையாகிய குடையின் கீழ், பக்கங்களில் உள்ள வயல்களில் நன்கு வளர்ந்த செந்நெற் கதிர்கள் சாமரைபோல வீச அரச அன்னம் வீற்றிருந்தது' என்று கூறியுள்ளார்.

இத்தகைய பொலிவுடன் அன்னம் வீற்றிருக்கு மாறால், அதனைக் கண்ணுற்று மகிழாமல் இருக்க முடியுமா? முடியாது. ஈண்டு நளன் முன் காட்சி அளித்த அன்னம் தனது உடலின் பொன் நிறத்தி ஞல், சோலையின் நிறத்தையே மாற்றி விட்டது. தனது பாதத்தின் செந்நிறத்தால், குளத்தையும் செந்நிறமாக்கிவிட்டது. இத்தகைய நிற அழகும், உடல் அழகுமுடைய அன்னத்தைப் பிடித்து அத னுடன் உரையாட நளன் விரும்பினான். விரும்பித் தன்னுடன் வந்த பணிப்பெண்களுள் ஒருத்தியை அழைத்து, அதனைப் பிடித்து வருமாறு ஏவினான். பணிப்பெண் அன்ன நடை போல் நடந்து அன்னத்தை அணுகினாள். அன்னம், தன் நடை போல் நடந்து வந்த பெண்ணினை வியப்புறப் பார்த்துக் கொண்டு இருக்கையில், அவள் அதனைப் பிடித்து வந்து நளன் முன் வைத்துப் பணிந்தனள்.

நளன் அதனைக் கையில் கொண்டு, அதன் அழ கைக் கண்டு அகம் மகிழ்கையில், அன்னம் கலங்கி யது. தன் பெடை அன்னத்தை எண்ணி எண்ணி ஏக்க முற்றது. மன்னன் முகத்தைத் துன்பக் குறியுடன் நோக்கியது. நளன் அன்னத்தின் மன நிலையினை உணர்ந்தான். இதுபோது அன்னம் மகிழும் வண்ணம் இன் மொழிகளைக் கூறினால் அன்றி, அன்னம் துயர் நீங்காது என்றுஉணர்ந்தான். உணர்ந்து அன்னத்தைப் பார்த்து, "அன்னமே, அஞ்சாதே. உன்னை யான் ஏதும் செய்யேன். புல வர்கள், பெண்கள் நடையினை அன்ன நடை என்று புகழ்வர். அஃது உண்மைதானா என்பதை அறி யவும், உன் நடையையும், பெண்கள் நடை

யினையும் ஒப்பிட்டுப் பார்த்து எது மிக்கது என்பதை உணரவும்தான் உன்னைப் பிடித்தேன். மேலும், உன் பால் அமைந்த பொன் நிறத்தை நான் இதுவரை கண்டிலேன். அதனையும் வியந்து நோக்க உன்னைப் பிடித்தேன்'' என்று அன்பு மொழிகளைக் கூறினான்.

இந்த இனிய அன்பு மொழிகளைக் கேட்ட அன்னத்தின் தடுமாற்றம் தீர்ந்தது. உடனே நளனது கையினின்றும் நீங்கிப் பறந்து சென்று தனது இருப் பிடமாகிய தாமரைத் தவசில் சென்று அமர்ந்தது. சிறிது நேரம் அங்குத் தங்கி, ''என்னை அரசனும் நளன் பிடித்தும் யாதும் செய்திலன். அன்னவன் செய்த நன்றிக்கு நானும் எதிர் நன்றி செய்ய வேண்டும்'' என்று எண்ணி நளன் கையில் மீண்டும் வந்து அமர்ந்தது.

நளன் கையில் அமர்ந்த அன்னம் நளனை நோக்கி, ''மன்ன, என்னுடைய சோர்வையும், அச் சத்தையும் கண்டு என்னை விடுதலை செய்தனையே, இதனால் உனது கருணை இன்னது என்பது எனக்குத் தெளிவாகிறது'' என்றது. இவ்வாறு தன் கருணை யைப் புகழக் கேட்ட நளன் அன்னத்தை நோக்கி, ''அன்னமே, நீ ஏன் மீண்டும் என்பால் வந்துற்றனை'' என்று வினவினான்.

இவ்வாறு வினவிய நளனை நோக்கி அன்னம், ''அரசே, என்னைப்போன்ற சிறு பறவைகளால் உனக்கு எந்த விதமான உதவியும் செய்ய இயலாது என்பதை நான் தெரிந்திருந்தும் ஒரு சிறு நன்றியைச் செய்ய விரும்பியுள்ளேன். அஃது இன்னது என்பதை அறிவிக்கவே

ஈண்டு மீண்டும் வந்தனன். ஆகவே எனது பணி வான மொழிகளை நீ விரும்பிக் கேட்க வேண்டும். உலகோர் பொன் கிண்ணத்தில் பால் கொண்டு கிளியையும், நாகணவாய் புள்ளையும் (மைனு) உண் பித்து, அவற்றிற்குத் தாமே சொற்களையும் கற்றுக் கொடுத்து அச் சொற்களையே அவை திருப்பிச் செல் வதைக் கேட்டு மகிழ்வர். ஆகவே, யானும் ஒரு பறவை ஆதலின், என் மொழிகளை மறுக்காமல் கேட்க வேண்டும்" என்று கூறி, "மன்னு! நீர் வளம், குடிவளம், கோன் வளம், முதலான எல்லா வளங் களும் கொண்ட விதர்ப்ப தேசம் என்னும் நாடு உளது. அதன் மன்னன் வீமராசன் என்பவன். அவன் ஒரு பெண்ணைப் பெற்றெடுத்தனன். அப் பெண்ணின் அழகிற்குத் தேவலோக மாதர்களாகிய மேனகை, ஊர்வசி, அரம்பை, திலோத்தமை ஆகிய மாதர்கள் கூடச் சமம் ஆகார். அவளது திருப் பெயர் தமயந்தி என்பது" என்று கூறிக் கொண்டு வரும்போது நளன் இடை மறித்து "அன்னமே அவளை இங்கு ஏன் நினைந்தனை" என்று வினவினுன். உடனே அன்னம் "மன்னு! அவள் அழகுக்கும், பண் புக்கும் ஏற்ற கணவனை மூன்று உலகங்களிலும் காண்டல் அரிது என்பதை நான் நன்கு அறிவேன். ஆனல், நான் உன்னைக் கண்டதும், அவளுக்கு ஏற்ற திருவும் (அழகும், செல்வமும்) உருவும் (வடி வழகும்) உடைய நீ தான் மணுளனுக மைதற் குரியவன் என்பதை உணர்ந்துதான் அவ்வை இங்கு நினைந்தேன். மன்னு, மேலும் அவளது பண்பைப் பற்றியும் கேட்பாயாக. அவள்பால் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு (ஆடவர்,

ஆடை முதலியனவும் படுவதைச் சகிக்காத பண்பு) ஆகிய நான்கு குணங்களும் தேர் யானை, குதிரை, காலாட்படைகளாக அமைந்துள்ளன. உடல், வாய், கண், மூக்கு, காது ஆகிய ஐந்து புலன்களும், நல் அமைச்சர்களாக இருக்கின்றன. அவள் தன் கால்களில் அணிந்துள்ள சிலம்புகள் முரசு வாத்திய மாக இருக்கின்றன. அவளுடைய கண்கள் வேல் படையும், வாள் படையுமாக அமைந்துள்ளன. இவ்வாறான அரசர்கட்குரிய அமைப்புடன் முகமாகிய சந்திரனது குடையின் கீழ், பெண்மை என்னும் அரசினைச் செலுத்திக் கொண்டிருக்கின்றாள்" என்று கூறியது.

நளன் அன்னத்தின் மொழிகளைக் கேட்டு, வியந்து மகிழ்ந்து "என்னிடம் ஒன்றுமே அவளைப் பற்றிக் கூறாமல் திருமணத்தை முடித்து வைக்கலாமே. நீ அவளது அழகையும், பண்பையும் இவ்வாறு கூறியதனால் என் உள்ளமும், ஆவியும், சோர்வடைகின்றன. அந்தத் தமயந்திக்கும், உனக்கும் எப்படித் தொடர்புண்டு?" என்று வினவினான்.

இவ்வாறு வினாவிய நளனுக்குத் தமயந்தியின் சிறப்பை நடை அழகின் மூலம் உணர்த்தக் கருதிய அன்னம் "மன்னா! தமயந்தி நடை அழகில் சிறந்தவள். அவளது நடை அழகைக் கற்க அங்கு எம் இனமாகிய அன்னங்கள் செல்லும். அவைகளோடு நானும் செல்வதுண்டு. இதுவே எனக்கும் அவளுக்கும் இருக்கும் தொடர்புக்குக் காரணம்" என்று கூறியது.

இங்ஙனம் அன்னம் கூறக் கேட்ட நளன் அன்னத்தை நோக்கி "நீ எவ்வாறேனும் தமயந்தியை எனக்கு மணம் முடித்து வைக்கவும்" என்று வேண்டினான். அன்னமும் நளன்பால் விடை கொண்டு தமயந்தி வாழ் விதர்ப்ப நாடு சென்றது.

அன்னம் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் நளன் அன்னத்தின் போக்கைப்பற்றிப் பலவாறு நினைக்கலுற்றவனாய், "அன்னம் இந்த நேரத்திற்குள் விதர்ப்ப தேசத்தை அடைந்திருக்குமா? இந்த நேரத்திற்குள் தமயந்தியைக் கண்டிருக்குமா? இந்த நேரத்திற்குள் நான் தமயந்தியினிடம் கொண்டுள்ள அன்பைப்பற்றிச் சொல்லியிருக்குமா? இந்த நேரத்திற்குள் திரும்பி வருமா?" என்று எண்ணிக்கொண்டிருந்தான். இது நிற்க.

சென்ற அன்னம் விதர்ப்ப தேசத்துக் குண்டினபுரச் சோலையை அணுகியது. அச்சோலையில் மலர்கள் கண்களைக் கவரும் நிலையில் மலர்ந்திருந்தமையின், அவற்றைப் பறிக்கத் தமயந்தி அங்கு வந்து சேர்ந்தனள். அன்னமும் தமயந்தியைக் கண்டு அவள் அருகே சென்றது. தமயந்தி தன் அருகு வந்துற்ற அன்னத்தைக் கண்டு தனியே அதனை அழைத்துச் சென்று "அன்னமே! இங்கு என்னை நாடி வந்தமைக்குக் காரணம் யாது?" என்று வினவினாள். அதுபோது அன்னம் நளனது பெருமையினைக் கூறத் தொடங்கியது.

அன்னம் தமயந்தியை நோக்கி, "தமயந்தி! நான் தேவர்களிடும் கட்டளையினைக் கூடச் செய்ய

மாட்டேன். ஆனால், நளன் இடும் பணியைப் புரிவதில் எனக்குப் பெருமகிழ்ச்சி யுண்டு. அவன் நல்ல உள்ளம் படைத்தவன். நற்குணம் வாய்ந்தவன். செங்கோல் நடத்தும் செவ்விய மன்னன். நல்ல அழகிய பெரிய தோள்களையுடையவன். உண்மை உரைக்கும் உத்தமன். அவனை விட மிக்காரும் ஒப்பாரும் மேலுலகினும் கீழ் உலகிலும் இலர். மன்மதனை ஒத்த பேரழகு வாய்ந்தவன். நளன் என்னும் பெயருடையவன். அவன் பொறுமையில் நிலமகட்கு ஒப்பானவன். அவனது உள்ளம் எப்போதும் அறத்தையே நினைந்த வண்ணம் இருக்கும். அவனுடைய கண்களில் அருள் நோக்குப் பொலிந்து கொண்டிருக்கும். அத்தகைய நலனுக்கு ஏற்ற நங்கை நீயே அன்றி வேறு எவரும் ஆகார். விதியும் கூட நீயும் அவனும் மணந்து வாழும் நிலையினைக் கூட்டுவிக்கின்றது. நீயே நளனுக்கு உரியவள் என்பதைப் பிரம்மதேவனும் எனக்குக் கூற நான் கேட்டுள்ளேன்'' என்று கூறி முடித்தது.

தமயந்தி நளனது அழகையும், பண்பையும் அன்னம் உரைத்ததைக் கேட்டு, எவ்வாறேனும் அவனுடன் மணந்து வாழ எண்ணம் கொண்டு, ''அன்னமே! என் உயிரைக் காக்க விரும்பினால் என் விருப்பத்தைச் சோலையில் தங்கி இருக்கும் நளமகாராசனிடம் போய் உடனே அறிவித்து மேற்கொண்டு ஆவனவற்றைப் புரியவும்'' என்று வேண்டினாள்.

ஆனால், அன்னம் தமயந்தி நளன்பால் உறுதியான அன்புடையவளா என்பதை அறியப் பல வினாக்களை எழுப்பியது. அவ்வினாக்களுள் ஒன்று

"தமயந்தியே! நீ நளனை விரும்புவது சரியே. என்றாலும், உன் தந்தையாம் வீமராசன் வேறு ஒரு மன்னனுக்கு உன்னை மணம் செய்துவைக்க முடிவு செய்தால், நீ என் செய்வாய்?'' என்றது.

இவ்வாறு அன்னம் கேட்டபோது, தமயந்தி, "தாமரை சூரியனைத் தவிர்த்து வேறு ஒன்றைக் கண்டால் மகிழ்ந்து மலருமோ? அவ்வாறே குமுதம் சந்திரனைக் கண்டு/மலருமே அன்றி வேறு எதையே னும் கண்டு மலருமோ? அவற்றைப்போலவே என் உள்ளம் நளனைத் தவிர்த்து வேறு அரசரை விரும் புமோ? விரும்பாது. இஃது உறுதி. மன்மதனே வரி னும் அவனுக்கு மாலை இடேன். ஒரு வேளை என் தந்தையாம் வீமமகாராசர் வேறு ஓர் அரசனுக்கு என்னை மணம் முடிக்க எண்ணினால், நான் தீயில் விழுந்து உயிர் விடுவேன். அன்னமே, நீ நளனோடு என்னைச் சேர்த்து வைக்கவில்லை எனில், நான் உயிர் விடுவேன். ஆகவே, விரைவில் இவ்விடம் விட்டு நளன்பால் சென்று என் எண்ணத்தினை உணர்த்துக'' என்று வேண்டினாள். "மேலும் அன்னத்தை நோக்கி, "அன்னமே! நீ நளனிடம் சமயம் அறிந்து என் நிலைமைகளைக் கூறவேண்டும். சமய சந்தர்ப்பம் தெரிந்து பேசவேண்டும். வேற்ற ரசர்கள் கப்பம் கட்டுதற்கு வந்து வணங்கி நிற்கும் போதும், பகை அரசர்கள்பால் நளன் சினம் கொண்டு பேசும்போதும், மந்திரி முதலியோர் சூழ்ந்து, ஆழ்ந்து ஆலோசனை செய்யும்போதும் சொல்லாதே. ஆகவே, நளன் தனித்து இருக்கும் சமயம் தெரிந்து கூறுக'' என்றனள்.

அன்னம் தமயந்திக்கு நளன் மீது இருக்கும் அன்புடைமையினை அறிந்து மகிழ்ந்து, "தமயந்தி நீ கவலற்க. உன்னைப்பற்றி நான் முன்பே நளனிடம் பலபடி சிறப்பித்துக் கூறியுள்ளேன். அதைக் கேட்ட பின்பே நளன் என்னை உன்பால் தூதுரைக்க அனுப்பினான். ஆகவே, அவனுக்கு உன்னை மணக்கப் பெரு விருப்பம் உண்டு. நளன் உன்னை மணக்க நீ வாழும் இந்த விதர்ப்ப தேசத்தை அடையச் செய்கின்றேன்." என்று கூறி நளனிடம் அன்னம் வந்துற்றது.

நளனோ அன்னத்தின் வருகையினை ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தான். அன்னத்தைக் கண்டதும் பெரிதும் மகிழ்வுற்று, "அன்னமே நீ சென்று வந்த செய்தியை விரைவில் செப்புக" என்று கேட்டனன்.

அன்னமும் நளனது மனநிலையினை நன்கு உணர்ந்து "மன்னா! வருந்தற்க. நான் சென்று உனது வேட்கையினை முடிக்காமல் திரும்புவேனோ? தமயந்தி உன்னையே மணக்க உறுதி கொண்டுள்ளாள். அவளது இசைவைப் பெற்றே இங்குத் திரும்பியுள்ளேன்" என்றது. இந்தவாறு அன்னம் கூறக்கேட்ட நளன் பெருமகிழ்வு கொண்டனன்.

## பயிற்சி வினாக்கள்

### தூதர் பண்பு

1. வள்ளுவர் தூதுவர்க்கு எவ்வெப் பண்புகள் இருக்க வேண்டும் என்கிறார்?

2. பாரத வெண்பா தூதுவர்களைப் பற்றி என்ன கூறுகிறது?

### 1. ஔவையார்

1. அதிகமான் என்போன் யாவன்? அவனைப் பற்றி அறிந்து கொள்வன யாவை?

2. ஔவையாருக்கும் அதிகமானுக்கும் இருந்த அன்பு அளவு கடந்தது என்பது எப்படித் தெரிகிறது?

3. தொண்டைமான் இளந்திரையனைப் பற்றி வரைக.

4. தொண்டைமான் படைச் செருக்கை ஔவையார் எவ்வாறு அடக்கினர்?

### 2. தியாகர்

1. சுந்தரர், அனிந்திதை, கமலினி ஏன் மண்ணுலகில் வந்து பிறந்தனர்?

2. சுந்தரர் அனிந்திதை, கமலினியாரை எங்கெங்கு மணந்தனர்?

3. தியாகர் எதனால் பரவையாரிடம் தூதுவராகப் போயினர்?

### 3. அங்கதன்

1. அங்கதன் யாவன்? அவன் யாரால் யாரிடம் ஏன் தூதுவனாக அனுப்பப் பட்டான்?

2. இராவணன் அங்கதனிடம் எம்முறையில் அன்புடனும் உறவு முறையுடனும் பேசினன்?

3. இராவணனுக்கும் அங்கதனுக்கும் நடந்த பேச்சினைத் தொகுத்து எழுதுக.

## 4. வீரவாகு

1. வீரவாகு என்பவர் யார்? அவர் யாரிடம் ஏன் தூதுவராகப் போயினர்?

2. சூரபதுமன் என்போன் யாவன்? அவனைப் பற்றி அறிந்ததைத் தொகுத்து எழுதுக.

3. வீரவாகு தேவர் சூரபதுமனுக்கு உணர்த்தியவை யாவை?

4. சூரன் தன் வீரம் தோன்றக் கூறியவை யாவை?

## 5. உலூகன்

1. சூது என்பதைத் தலைப்பாகக் கொண்டு ஒரு கட்டுரை வரைக?

2. உலூக மாமுனிவர் யார் பொருட்டு எங்கு ஏன் தூதுவராகச் சென்றனர்?

3. உலூகர் துரியனிடம் எவ்வெவற்றை எடுத்துக் கூறினர்?

## 6. சஞ்சயன்

1. சஞ்சய முனிவர் தருமரிடம் கூறியவை யாவை?

2. தருமர் சஞ்சயரிடம் சீற்றத்துடன் எடுத்து மொழிந்தவை எவை?

3. வீமன் கோபத்துடன் என்ன கூறினன்?

## 7. கண்ணன்

1. தருமர் கண்ணனைத் துரியனிடம் தூதுவனாக அனுப்புதற்கு முன் என்னென்ன கூறுமாறு வேண்டினர்?

2. வீமன் வெகுண்டு உரைத்தவை எவை?

3. அர்ச்சுனன் அறைந்த மாற்றங்கள் எவை?

4. நகுலனும் திரௌபதியும் கூறியவை எவை?

5. கண்ணன் சகாதேவனைத் தனி இடத்திற்கு ஏன் அழைத்துச் சென்றனன்?

6. சகாதேவன் கிருட்டிணனிடம் கூறியவற்றைத் தொகுத்து எழுதுக.

7. கிருட்டிணன் ஏன் விதுரர் வீட்டிற்குச் சென்றனர்? விதுரர் எப்படிக் கிருட்டிணனை உபசரித்தனர்?

8. கிருட்டிணன் தான் எதன் பொருட்டு விதுரர் இல்லத்தில் தங்கியதாகத் துரியனிடம் கூறினன்?

9. கிருட்டிணன் துரியனிடம் கூறியவை எவை?

10. துரியன் தன் கருத்தாக எவ்வெவற்றை அறிவித்தனன் ?

11. துரியனுக்குப் பீஷ்மர், துரோணர், விதுரர் அறிவித்தவை யாவை ?

12. கிருட்டிணன் குந்தி தேவியின் மூலமும் இந்திரன் மூலமும் எந்தெந்த ஏற்பாடுகளைச் செய்தனன்?

## 8. நளன்

1. வீமராசன் யாவன் ? அவனது மகளைப் பற்றியும் வரைக.

2. தமயந்தியை மணக்கப் புறப்பட்டவர்கள் யாவர் ? அவர்கள் தமயந்தியைப் பற்றி நினைத்தவற்றையும் கூறுக.

3. நளன் விதர்ப்ப தேசத்தை நோக்கி ஏன் புறப்பட்டான் ?

4. நளன் தேவர்களைக் கண்டு அவர்கள் கூறியவற்றைக் கேட்டதும் என்னென்ன எண்ணினுன் ?

5. நளன் தமயந்தியின் கன்னிமாடத்தில் கண்டவை கேட்டவை நிகழ்ந்தவை பற்றி வரைக.

6. தமயந்தி நளனிடம் அளவற்ற அன்பு கொண்டிருந்தாள் என்பது எப்படித் தெரிகிறது ?

## 9. அன்னம்

1. நளன் அன்னத்தை எவ்வாறு காண நேர்ந்தது?

2. அன்னம் நளனுக்குத் தமயந்தியை மணம் முடித்து வைக்க ஏன் கருதியது ?

3. அன்னம் தமயந்தியின் சிறப்பை நளனிடம் எப்படி எடுத்து இயம்பியது?

4. அன்னம் தமயந்தியிடம் நளனது பெருமைகளை எப்படிப் புகழ்ந்து பேசியது ?

5. அன்னம் தமயந்திக்கு நளன்பால் உண்மை அன்பு உள்ளது என்பதை எப்படி அறிந்து கொண்டது ?

# ELAKKIYA THOOTHARGAL

**Supplementary Reader for VIII Standard**

*By*

PROFESSOR VIDWAN
PALOOR KANNAPPA MUDALIAR, M.A ,B.O.L.
Head of Tamil Department, New College, Madras.

T. BALARAMAN & BROTHERS
(PUBLISHERS OF QUALITY BOOKS)
5/5, WHANNELS ROAD, EGMORE, MADRAS-8.

*Copyright* ] 1967 *[Price Re. 1-00*